JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 9.] செப்டெம்பர் மீ 1888. [புஸ்த. XIX.

CONTENTS.

Does Morality increase with Learning? :—A discussion between a Logician and a Philosopher in the presence of a Sovereign.................. 193
The Life of a Bear (*Continued*) 204
He who devotes himself to Mammon - worship cannot place his affections on any thing else......................... 208
The Origin of Language........ 212
The Advantages of Early-Rising 214
News... 216

அட்டவணை.

கல்வியறிவு அதிகரிக்குந்தோறும் ஒழுக்கமும் அபிவிருத்தியாகின்றதா?:—ஓர் அரசன் சமுகத்தில் தர்க்க சாஸ்திரியாருக்கும் தத்துவ சாஸ்திரியாருக்கும் நடந்த வாக்குவாதம்......................... 193
ஓர் கரடியின் கதை (தொடர்ச்சி). 204
பொருளில் பேராசையுள்ளவனுக்கு யாராசையுமில்லை...................... 208
பாஷையின் உற்பத்தி................ 212
அதிகாலையில் எழுந்திருப்பதனால் உண்டாகும் பயன்...................... 214
சமாச்சாரம்.................................. 216

MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

ஜநவிநோதிநி.

இல. 9.] செப்டெம்பர் மீ 1888. [புஸ்த. XIX.

கல்வியறிவு அதிகரிக்குந்தோறும் ஒழுக்கமும் அபிவிருத்தியாகின்றதா?

இரத்தினபுரம் என்னும் நகரத்தில் மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாதுகாத்துத் தனியரசு புரிந்துவந்த பத்மநாபன் என்னும் அரசன் கல்வி கேள்விகளில் பெரிதும் பிரீதியுடையவனாயிருந்தபடியால், மானதபதார்த்தசொரூபலட்சண சாஸ்திரங்களிலும் தத்துவ சாஸ்திரங்களிலும் வியாகரணம் தர்க்கம் முதலிய சாஸ்திரங்களிலும் அதிக பாண்டித்தியம் அடைந்து, தன்சபையில் அறுபத்து நான்குகலைகளிலும் பூரண ஞானம் எய்தப்பெற்ற வித்துவான்களைவைத்து ஆதரித்துவந்தான். இப்படியிருக்கையில் அவ்வரசனுக்கு ஒருவர்பின்னொருவராக நான்கு குமாரர்கள் பிறந்து நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ந்து வருகையிலே அந்நான்கு புத்திரர்களுக்கும் இராஜகாரியங்களில் பிரவர்த்திக்கத்தக்க பருவம் வந்தது. அதைக்கண்ட பத்மநாபன் தன் அரசாட்சிக்குட்பட்ட நாடுகள் யாவற்றையும் நான்கு பிரிவுகளாகப்பிரித்து ஒவ்வொரு குமாரனுக்கும் ஒவ்வொரு பிரிவைத் தந்து மநுநீதிதவறாது அரசாட்சி நடத்திவரும்படி கட்டளையிடலாமென்று அபிப்பிராயங்கொண்டான். மூத்த குமாரன் கல்வியறிவும் ஒழுக்கமும் சால அமையப்பெற்று யாவராலும் நன்குமதிக்கப்பட்டு வருவதையும், இரண்டாவது குமாரன் கல்வியில் தேர்ச்சியற்றவனாயும் புத்திகூர்மையில்லாதவனாயுமிருக்கினும் ஒழுக்கத்தில் மாத்திரம் மிகவும் சீலனாய்த்தெய்வபக்திமுதலிய சற்குணங்கள் நிறைந்திருப்பதையும், மூன்றாவது குமாரன் கல்வியில் எவ்வகைப்பட்டபண்டிதரும் வியக்கத்தக்க சாமர்த்தியம்பெற்று அதிக புத்திகூர்மையுடையவனாயிருந்தும் ஒழுக்கத்தில் யாவரும் அருவருக்கத் தக்கவனாய்ப் பஞ்சமாபாதகங்களையும் மனங்கூசாது செய்யத்தக்கவனாயிருப்பதையும், நான்காவது குமாரன் கல்வியறிவு-ஒழுக்கம் என்னும் இவ்விரண்டிலும் மிக்கவறியோனாகி ஈன்றோரும் இகழத்தக்கவனாயிருப்பதையுங்கண்டு பத்மநாபன் தீராமனக்கவலைகொண்டு, அந்தோ! தெய்வமே! என்செய்வேன்! ஒழுக்கமும் கல்வியறிவும் ஒருபடித்தாய் அமையப்பெற்ற மூத்தகுமாரனையன்றி ஏனைய குமாரரிடத்து என்

அரசாட்சிக்குட்பட்ட எவ்வளவு சிறியபாகத்தையும் ஒப்பிப்பது என்மனச்சான்றுக்கு எவ்வளவும் நலமெனத்தோன்றவில்லையே; ஏனெனில் குடிகளுக்கு அரசனையன்றி இவ்வுலகத்தில் வேறுபுகலிடமில்லை, அவனே அவர்களுக்குத் தெய்வமென்று பொருள்பட "அனைவோர்க்குந் தெய்வம் இலைமுகப்பைம்பூணிறை." என்று மேலோர் கட்டளையிட்டிருக்கின்றனர். ஆனபடியால் இறைமாட்சிக்குக் கல்வி-கேள்வி-அறிவுடைமை முதலியவை எவ்வளவு இன்றியமையாதனவாயிருக்கின்றனவோ அவ்வளவு, காமாதிய குற்றங்களைக்கடிந்து பெரியாரைத் துணைக்கோடல்முதலிய சற்குணங்களமையப்பெற்று நல்லொழுக்கம் அமைந்திருப்பதும் இன்றியமையாததென்றே மேலோர்கூறாநிற்பர். அப்படியிருக்க எனது இரண்டாவது மூன்றாவது குமாரர்களுக்குள் ஒருவன் ஒழுக்கமில்லாதவனும் மற்றொருவன் கல்வியறிவில்லாதவனும் இருக்கிறபடியால் அவர்களை நம்பி குடிவர்க்கங்களை ஒப்பிப்பது தர்மமாகுமா? கடைசிகுமாரன் இரண்டு மற்றவனாயிருக்கிறான். என்று இவ்வண்ணமாகத் தனக்குள் முடிவு தோன்றாமல் ஆலோசனைசெய்துகொண்டிருக்கையில் பத்மநாபன் ஒருநாள் தன் சபையிலிருந்த வித்துவகோஷ்டிகள் யாவரையும் பார்த்து அடியில்வருமாறு கேட்கலாயினான்:—

பண்டிதசிரோன்மணிகளே, எனக்குப் பெருத்தசங்கை ஒன்றிருக்கிறது. உங்களுடைய அபிப்பிராயத்தை அறிந்துகொள்ள நான் விரும்புகிறேன். மனிதருடைய இயல்புக்குப் பற்பல அபிப்பிராய பேதங்களிருப்பது மரபேயாம், நான் கேட்கப்போகும் விஷயத்தைக்குறித்து நீங்கள் யாவரும் தீர்க்காலோசனைசெய்து, யாவரும் ஒத்த அபிப்பிராயங்கொள்ளாமல் சிலர் ஒருவகையான அபிப்பிராயமும் மற்றுஞ்சிலர் வேறுவகையான அபிப்பிராயமுங் கொள்ளுகிறபட்சத்தில், இரண்டுகட்சிளாக நீங்கள்பிரிந்து ஒவ்வொருகட்சிக்கும் பிரதிநிதியாக ஒவ்வொருவனை ஏற்படுத்தி நியாயவாயிலாகத் தீர்மானம் சொல்லவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"எம்மையுலகத்தும் யாங்காணேங்கல்விபோன்
மம்மரறுக்குமருந்து."

கல்வியைப்போல அஞ்ஞானமென்னும் மயக்கத்தைஅறுக்கவல்ல மருந்தை எவ்வுலகத்தும் யாம் கண்டதில்லை என்றும்,

"விலங்கொடு மக்களனையரிலங்குநூல்
கற்றாரோடேனையவர்"

கல்விகற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் உள்ளபேதம் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை ஒத்திருக்கிறதென்றும் மேலோர் கல்வியைப்பற்றி மிகவும் வியந்துரைத்திருக்கின்றனரன்றோ?

"தொட்டனைத்தூறு மணற்கேணிமாந்தர்க்குக்
கற்றனைத்தூறுமறிவு."

மணலினிடத்தே கேணியானது தோண்டிய அளவாகச் சுரப்பதுபோல
மனிதர்க்குக் கல்விகற்ற அளவாக அறிவு உண்டாகும் என்றும் மே
லோருடைய பிரமாணமிருக்கிறதல்லவா? இவ்வளவுசிறந்த கல்வி ஒரு
வனிடத்தில் சால அமைந்து அதற்கேற்ற புத்திகூர்மையும் பொருந்
தியிருக்கையில் அவனிடத்துச் சற்குணங்களும் நல்லொழுக்கமும் அ
மைந்திருக்கவேண்டியதும் நியாயந்தானே? கல்வியில் பாண்டித்தியம்
பெற்றிருந்தும் சிலர் பொய்-களவுமுதலிய பஞ்ச மகாபாதகங்களைச்செ
ய்ய மனங்கூசாமல்முற்றும் ஒழுக்கமற்றவர்களாயிருக்கின்றார்களே? அ
ன்புடைமை - அடக்கமுடைமை - நடுவுநிலைமை - தெய்வபக்திமுதலிய
நல்லொழுக்கத்திற்குரிய குணங்களை வளர்க்காவிடில் கல்வியினாலாகிய
பயன் யாது? கல்வியினால் இத்தியாதிகுணங்கள் வரமாட்டா என்போ
மாயின் அக்கல்வியை நம்முடைய பாலியர்கட்குப் போதிப்பதினால்
தான் யாதுபயன்? கல்வியைப்பற்றி விசேஷமாய்க்கூறிய மேற்கண்ட
ஆன்றோருடைய வசனங்களெல்லாம் பொய்மொழிகளா? உலகத்தில்
ஜனங்கள் மேன்மேலும் கல்விபயின்று புத்திகூர்மையடைந்து வருந்
தோறும் அவர்களுடைய ஒழுக்கமும் அங்ஙனமே அபிவிருத்தியாய்க்
கொண்டுவருகிறதா? நாகரீகமும் விவேகமும் அதிகரிக்குந்தோறும்
ஜனங்கள் ஒழுக்கத்திலும் மேம்படவேண்டியதல்லவா?

“ஒழுக்கத்தினெய்துவர் மேன்மையிழுக்கத்தி
னெய்துவரெய்தாப்பழி.”

ஒழுக்கத்தினாலே மேன்மையடைவாரென்றும், அதினின்றும் தவறுவ
தினாலே பெரும்பழியடைவாரென்றும் மேலோர்கூறிய அமுதவாக்
கை யோசிக்கையில் ஒழுக்கத்தை ஒவ்வொருவனும் தன்னுயிரினும் வி
சேஷமாகப் பாதுகாக்கவேண்டியதல்லவா? அப்படியிருந்தும் கல்வியு
டையானிடத்து ஒழுக்கமில்லாமைக்கும் ஒழுக்கமுடையானிடத்துக்
கல்வியில்லாமைக்கும் காரணம் யாதோ? இவ்விரண்டில் ஒன்றிருக்கு
மிடத்தில் மற்றொன்று இருக்கவேண்டிய அவசியமா? இவ்வினாக்களு
க்குத்தக்க சமாதானம் நியாயவாயிலாகக் காட்டுவீர்களாக.

இவ்வாறு அரசன் வினாக்களைக்கேட்டு முடிந்தபின் அச்சபையி
லிருந்த சாஸ்திரிகள் யாவரும் ஒருங்குகூடிச் சற்றுநேரம் தமக்குள்ளே
யே மெல்ல ஆலோசனைசெய்துகொண்டு இரண்டு கட்சிகளாகப்பிரிந்து
வெவ்வேறாக இருந்தனர். மன்னர்பெருமானுடைய கட்டளைப்படியே
ஒரு கட்சியைச்சார்ந்த பண்டிதர்களின் பிரதிநிதியாக சவுந்தரர் என்
னும் தர்க்கசாஸ்திரியார் எழுந்திருந்து அடியில்வருமாறு உபந்நியாசிக்
கலாயினர்.

சவுந்தரர் என்னும் தர்க்கசாஸ்திரியார் செய்த உபந்நியாசம்.

மகாராஜாவே, என் கட்சியைச்சேர்ந்த பண்டித சிரோன்மணிகள்
அநேகர் இச்சபையிலிருக்கத் தேவரீர் கேட்ட அருமையான விஷயத்
தைப்பற்றிச்

"சிந்தையிற்சிறியேன் கூறத்தொடங்குதல்சேடன்சூடு
முந்தைவையகத்தை நாங்கூழ்முடிப்பலென்றடுத்தவாறே."

சிறியேன் தேவரீர்சமுகத்தில் வசனிக்கமனதில் நினைத்தல் ஆதிசேஷன் பணமுடியில் தாங்கிக்கொண்டிருக்கும் பழமையாகிய இவ்வுலகத்தை ஒரு நாகப்பூச்சியானது தன் முடியில் தாங்குவேனென்று அடுக்குதல் போலாகும். ஆயினும் அப்பண்டித சிரோன்மணிகள் என்னையொரு பொருளென மதித்து அவர்கள் சார்பில் பிரதிநிதியாக எழுந்து வசனிக்கக் கட்டளையிட்டபடியால் அடியில்வருமாறு எனக்கு இயன்றவளாயில் நியாயவாயிலாகச் சிலவற்றை யெடுத்துரைக்கின்றேன்.

நல்லொழுக்கத்துக்கும் கல்வியறிவுக்கும் சம்பந்தம் உண்டா இல்லையா என்பதைப்பற்றித் தேவரீருக்குச் சந்தேகம் உண்டானதற்காக யான் மிகவும் துக்கமடைகின்றேன். தேவரீர் உதகரித்துக் காட்டிய மேலோருடைய அருமையான வாக்கியங்களே கரதலாமலகம்போல் உண்மையைக் காட்டத்தக்கன. "மாந்தர்க்குக் கற்றனைத்தூறுமறிவு" என்றும், "யாங்காணேம் கல்விபோல் மம்மரறுக்குமருந்து" என்றும் மேலோர்கூறிய அநுபவ வாக்கியங்களினாலும், "மடங்கொன்றறிவகற்றுங் கல்வி" என்னும் பிரமாணத்தினாலும் கல்வியினால் அறியாமைநீங்கி அறிவு விளக்கமாகின்றது என்பதற்கு ஐயமில்லை. அறிவு என்னும்பதத்தில் ஒருவனிடத்து அமையவேண்டிய யாவும் அடங்கும்; ஏனெனில்

"அறிவுடையாரெல்லா முடையாரறிவிலா
ரென்னுடையரேனுமிலர்."

அறிவுடையவர் ஒன்றையுமில்லாதவராயினும் எல்லாமுடையவராவார், அறிவிலார் எல்லாமுடையவராயினும் ஒன்றும் இல்லாதவராவார் என்று தெய்வப்புலவர் கட்டளையிட்டிருக்கின்றனர். அதை யோசிக்கையில் கல்வியினாலுண்டாகும் அறிவுடைமையில் ஒழுக்கமென்னும் சற்குணமும் அமையுமென்று நிராக்ஷேபனையாய்த் தெரியவருகிறது. ஒருவன் கல்வியினாலே விவேக விளக்கமடையுந்தோறும்அவனிடத்தில் இரக்கம்-அடக்கம்-நடுவு நிலைமை-தெய்வபக்தி முதலிய நல்லொழுக்கத்தின்குறிகளாகிய சற்குணங்கள் அமைந்துவருவதை நாம் உலகத்தில் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். கொலை-களவு-கள்-காமம்-பொய்முதலிய பஞ்சமகாபாதகங்களும் கல்லாத அறிவிலிகளிடத்தே பெரும்பாலும் தலையெடுத்து ஓங்குகின்றன. தேவரீருடைய இராச்சியத்தில் பிரசித்தமான குற்றவாளிகளென்று பெயரெடுத்துக் கடுங்காவலில் வைக்கப்படுபவர்களும், தீபாந்தரசிட்சை விதிக்கப் படுபவர்களும், மரணதெண்டனை விதிக்கப்படுபவர்களும் பெரும்பாலும் கல்வி பயிலாத அறிவிலிகளாகவே யிருக்கின்றனரே யன்றிக் கல்வி கற்றுணர்ந்த விவேகிகள் அப்படிப்பட்ட தெண்டனைகளுக்குள்ளாவது ஏகதேசமாயிருக்கின்றது. இவ்வுண்மை இராச்சிய பரிபாலனம் செய்யும் தேவரீருக்குத் தெரியாத விஷயமல்லவே? கல்வி கற்றவர்கள் ஒருபோதும் அந்தப்படி சிட்சைக்கு உள்ளாவதில்லையென்று யான் சொல்ல வரவில்லை. அவர்கள் அந்

தப்படி குற்றவாளிகளாவது சிறுபான்மை யென்பதே என்னுடைய கொள்கை. ஒருசித்தாந்தத்தை எடுத்து ஸ்தாபிக்கும்போது புறநடைகளாயுள்ள சிறுபான்மையான விஷயங்களை யோசியாமல் பொதுவிதிகளாகிய பெரும்பான்மையான விஷயங்களையே யோசிக்கவேண்டியதென்பது சாஸ்திர சம்மதம். உலகத்தில் ஜனங்கள் முன்னிருந்ததைவிட இப்போது கல்விதேர்ச்சியினால் புத்திகூர்மை யுடையவராகி நாகரீகம் பெற்றிருக்கிறார்களென்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை. விவேகத்தின்பயனாகிய நாகரீகத்தின் காரணமாய் அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் சீர்திருத்தம் அடைந்திருக்கிறார்களென்பதை நாம் வெள்ளிடைமலைபோற் காணலாம். நாகரீகமற்ற முற்காலத்திலே ஜனங்கள் சகோதரவாஞ்சையற்று ஒருவரோடொருவர் இரக்கமின்றிச் சதாபோர்புரிந்தும், ஒருவருடைய பொருளை மற்றொருவர் அபகரிக்க முயன்றும் உதிர வெள்ளத்தில் நீந்திவந்தனர். நாகரீகம் மேம்பட்ட இக்காலத்தில் சகோதரவாஞ்சை ஒவ்வொருவருடைய மனதிலும் குடிபுகுந்து இரக்கம் - தயை - தாட்சணியம் முதலிய சற்குணங்கள் அமைந்திருக்கிறபடியால் ஜனங்கள் சண்டைசச்சரவு இல்லாமல் சுகஜீவிகளாயிருக்கின்றனர். அரசர்கள் முற்காலத்திலே இரக்கமற்றுக் குடிகளை இம்சித்துக் கொடுங்கோலர்களா யிருந்தனர். இப்போதோ மன்னுயிரைத் தம்மின்னுயிர்போற் பாவித்து ஜனங்களுக்குச் சுவயேச்சை வாழ்க்கையைத் தந்துகொண்டிருக்கும் தேவரீரைப் போன்ற அரசர்கள் தோன்றிச் செங்கோலர்களா யிருப்பது நாகரீகத்தின் பயனன்றோ? விதிவிலக்குகளைத் தெரியாத ஒருவன் தான் தழுவ வேண்டியது இன்னதென்பதையும் ஒழிக்கவேண்டியது இன்னதென்பதையும் உணரான். அவற்றைத் தெரிந்தவன் உணருவான். கல்வி ஒருவனுக்கு விதிவிலக்குகளைக்காட்டவல்லது. ஆனபடியால் கல்வியுடையான் விதிவிலக்குகளையறிதல்கூடும், அங்ஙனம் அறிந்தவிடத்து அவன் விதியைத்தழுவவும் விலக்கைஒழிக்கவும்நேரிடும். இதைவிட ஒழுக்கம்எனற்பாலதுவேறேயாது? கல்வியறிவில்லாதவன் ஒழுக்கமுடையானாயிருப்பது அருமையினும் அருமை; ஏனெனில் இன்னது செய்வதுசரி, இன்னது செய்வது சரியன்று என்பதை உணர விவேகமும் புத்திகூர்மையும் இல்லாவிடத்து அவனென்செய்வான்? அவற்றைத்தருவது கல்வியேயன்றோ? விவேகமும் புத்திகூர்மையுமில்லாத ஒருவன் ஒருவேளை ஒழுக்கவானாயிருக்க நேரிடினும் அவனுடைய ஒழுக்கத்திற்காக அவனை யாரும்வியவார். அவன் ஒழுக்கஹீனனாயிருக்கினும் அவனையாரும் இகழார். பகுத்தறிவு அற்ற ஓர்பித்தன் ஓர்காலத்தில் ஒருவருக்கும் எவ்வகைப்பட்ட தீமையும்செய்யாது சும்மா ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தால் அவனை அதற்காகஇவன்ஒழுக்கத்திற் சிறந்தசீலனென்று ஒருவரும் நன்குமதியார்; அல்லது அப்பித்தன் மற்றொருகாலத்தில் பிறரைவைதும் அடித்தும் வருவானாயின்அதற்காக அவனை அரசன் முன்னிலையிற்கொண்டுவந்து தெண்டிப்பாரொருவருமில்லை. இதற்குக் காரண

ம் அவனுக்குப் பகுத்தறிவின்மையே. இப்படியே விலங்காதிகளின் செய்கையும். ஆகையால் புத்திகூர்மையே ஒருவன் ஒழுக்கத்திற் சிறப்பதற்குக் காரணம்.

விவேகம் எவ்விடத்தில் பூரணமாயமைந்திருக்கின்றதோ அவ்விடத்தில் சற்குணங்கள்யாவும் பூரணமாயமைந்திருக்குமென்பதற்குக் கடவுளே நமக்குப் பிரத்தியட்சமானசாட்சி. முற்றுமுணர்தலென்னும் பூரணஞானம் அமைந்திருக்குமவரிடத்துப் பேரருளுடைமை-முடிவிலாற்றலுடைமை என்னுங் குணங்களு மமைந்திருப்பதை யோசிக்கையில்,அறிவுவிளக்கமுள்ள விடத்தில் ஒழுக்கமுமுண்டென்பதை அவரே உலகுக்குக் காட்டுகின்றனரென்பது தெளிவாய் விளங்குகின்றது. மேலும் சற்குணங்கள் யாவற்றினும் சிறந்ததாயுள்ள தெய்வபக்தி உண்டாவதற்கு விவேகமே முக்கியகாரணம். எப்படியெனில், உலகத்திலுள்ள சிருஷ்டிபேதங்களையும் அவற்றின் விசித்திரங்களையும் அவை இயங்குவதற்காகக் கடவுளால் அமைக்கப்பட்ட ஏற்பாடுகளையும் கல்வியினாலுண்டாகும் விவேகத்தைக்கொண்டுஒருவன் பூரணமாயறிந்தாலன்றி இவற்றை உண்டாக்கின தனிமுதல் ஒன்றிருத்தல்வேண்டுமென்னும்நிச்சயமும்,அத்தனிமுதற்பொருளின் வரம்பிலாற்றலுடைமையும் ஒருவனுக்குப்புலப்படுவதுஅருமையினும்அருமை. கேவலம்கல்வித்தேர்ச்சியில்லாதஅவிவேகிக்கு நல்லோருடையகூட்டுறவினால் ஏதோஓர்காலத்துத்தெய்வத்தினிடத்து ஓர்விதமூடபக்தி ஜனிக்கினும்அதுஅவன் மனதில் பசுமரத்தாணிபோல் வேரூன்றாமல் வெகு சீக்கிரத்தில் மாறிவிடும். ஆஸ்திகரைப்போல் இருந்த அனேகர் ஒருநொடியில் நாஸ்திகராய்விட்டதை நாம் உலகத்தில் பலகாலும் கண்டிருக்கிறோமல்லவா? அதற்குக்காரணம்யாது? அவர்கள் ஆஸ்திகர்களாயிருந்தபோது கல்வியில் மேன்மேலும் அபிவிர்த்தியடைந்து தம் விவேகத்தைக்கொண்டு பதிப்பொருளின் உண்மையை அறிவதற்கு ஏற்ற ஆராய்ச்சிமுதலியவற்றைச் செய்யாமல் சும்மா இருந்தபடியினால்தான் அவர்களுடைய தெய்வநம்பிக்கை வெகு சீக்கிரத்தில் அவர்களைவிட்டொழியலாயிற்று. "பூதமைந்து நிலையிற்கலங்கினு,மாதோர்பாகர் மலர்த்தாண்மறப்பிலா,ரோதுகாதலுறைப்பினெறிநின்றார், கோதிலாத குணப்பெருங்குன்றினர்." என்று வியந்துரைக்கப்பட்டமெய்யடியார்கள் யாவரும் சரியை-கிரியை முதலியவற்றினின்று ஒழுக்கத்திற் சிறந்தவராயிருக்கினும் அதனோடுகூடப் பூரணவிவேக விளக்கமும் பெற்றவர்கள். இத்தியாதி காரணங்களினால் விவேகம் முதிர முதிர தெய்வபக்திமுதலிய சற்குணங்களும் நிலைபெறுவதற்கு இடமிருக்கிறதென்பது என்கொள்கை.

> " அறம்பொருளின்பமும் வீடும்பயக்கும்
> புறங்கடைநல்லிசையுநாட்டு—முறுங்கவலொன்
> றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூஉங்கில்லை
> சிற்றுயிர்க் குற்றதுணை."

புருஷார்த்தங்களாகிய தர்மார்த்த காம மோக்ஷமென்னும் அறம் -

பொருள் - இன்பம் - வீடு என்பவற்றைக் கல்வி தரத்தக்கதென்று மேலோர் கூறிய அமுதவசனம் எவ்விதத்திலேனும் பொய்யாகுமா? அந்தமிலின்பத் தழிவிலா வீட்டையே கல்வி தரத்தக்கதென்று சொல்லுவோமாயின் அதற்குச் சாதகமாயுள்ள சற்குணங்களையும் ஒழுக்கத்தையும் அதுதரத்தக்கதென்பதும் ஒருவியப்போ? அது அவ்வண்ணம் தராமற்போமென்று சொல்ல யாருடைய நா எழுமோ அறிகிலேன்.

மேற்போந்த காரணங்களினால் இராஜாதிராஜனே, விவேகவிளக்கம் பெற்றவர்களிடத்துப் பெரும்பாலும் ஒழுக்கமிருக்குமென்றும், ஜனங்களிடத்து நாகரீகம் அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் ஒழுக்கத்தில் மேம்படுவார்களென்றும், தேவரீருடைய அரசாட்சிக்குட்பட்ட நாடுகளெங்கும் பலவித கல்விச்சாலைகளேற்படுத்தி அங்கு குடிகளுக்குவிவேகவிளக்கத்தை உண்டாக்கத்தக்க கல்வியை அபிவிருத்திசெய்யவேண்டியதென்றும், அங்ஙனம் செய்வதாகிய ஒன்றே அவர்களை ஒழுக்கத்திற் சிறந்தவர்களாக்குவதாகுமென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன்.

சதானந்தர் என்னும் தத்துவசாஸ்திரியார்செய்த உபந்நியாசம்.

மன்னர்பெருமானே, பிரதமத்தில் தேவரீர் கேட்ட வினாக்களுக்கு எனது மித்திரராகிய சவுந்தரர் விடையளித்த அருமைப்பாட்டை வியவாதவர் ஒருவருமிலரேனும், அவர் கூறிய நியாயங்கள் என் சிற்றறிவுக்குச் சரியானவைகளாகத் தோன்றவில்லையாதலின் யான் பின்வருமாறு கூறத்தொடங்குகிறேன். என் கட்சியைச் சேர்ந்த பல வித்துவசிகாமணிகளும் தங்களுக்குப் பிரதிநிதியாகவிருந்து தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று என்னையொரு பொருட்டாக மதித்து மன்றாடினார்களாதலின் தேவரீர் சமுகத்தில் யான் தெரிந்தமட்டும் சிலவற்றை வசனிக்கத் துணியலுற்றேன். யான் கூறும் விஷயங்களில் ஏதேனும் குற்றமிருக்கினும் அதை நீக்கிக் குணத்தை மாத்திரம் தேவரீரும் இங்குள்ள வித்வசிகாமணிகளும் கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்; ஏனெனில் சான்றோர்-

> "மேற்றிகழ்நவையு மாற்றி விரும்புவர் சேறு சேர்ந்துந்
> தேற்றினுந் தேற்றிக்கொள்வர் தீம்புனல் வேட்டுண்பாரே."

குற்றங்களிருக்கின் அவற்றைப் பொருளெனமதியாது நீக்கிக் குணத்தைக் கொள்வார். எப்படியெனில் மதுரமுள்ள நீரை விரும்பியுண்பவர்கள் அந்நீரில் சேறு கலந்திருந்தாலும் அதை நீக்கிவிடாமல் (சேறு அடியிற்படிந்து விடும்படி இயல்பாகத் தெளிவித்தும்) தேற்றாங்கொட்டையினால் தெளிவித்தும் உபயோகித்துக்கொள்வார்கள்.

இவ்வுலகத்தில் ஒருவன் கல்வி பயிலப்பயில அவனது புத்திமேன்மேலும் கூர்மையாகுமென்பது சர்வ சம்மதம். அதனால் நல்லொழுக்கம் அபிவிருத்தியாயினும் ஆகலாம், ஆகாமற்போயினும் போகலாம்.

ஒருவனது புத்திகூர்மைக்கும் ஒழுக்கத்துக்கும் யாதொரு சம்பந்தமுங் கிடையாது. பொய்-களவு முதலிய பஞ்சமகாபாதகங்களைக் கொஞ்சமேனும் மனக்கலக்கமின்றி வெகு லேசாய்ச்செய்ய வல்லவர்கள் பெரும்பாலும் சூட்சும புத்தியுடையவர்களாயிருப்பதை நாம் பிரத்தியட்சமாய்க் காண்கிறோம். நீரரண்-மலையரண்-மதிலரண் என்னும் அரண்களாலும், ஆயுதபாணிகளாயுள்ள அளவிறந்த சுத்தவீரர்களாலும், அஸ்திர சஸ்திர ஆயுதவகைகளாலும் நாற்புறமும் காவற்படுத்தப்பட்ட அரண்மனையைச்சேர்ந்த அந்தப்புரத்திலிருக்கும் இராஜஸ்திரீ சயனித்துக்கொண்டிருக்கையில் அவள் மூக்கில் அணிந்துகொண்டிருந்த திருகாணியிலுள்ள ஓர் இரத்தினத்தை ஒருவருக்கும் தெரியாமல் கவர்ந்துசென்ற கள்வனுடைய சரித்திரத்தையும் யாம் கேட்டிருக்கின்றோமல்லவா? இத்தனை இடையூறுகளையும் கடந்து அந்த இரத்தினத்தைத் திருடுவதற்கு அனுகூலமான வழிவகைகளையும் முகாந்தரங்களையும் எவ்வளவு நுட்பபுத்தியோடு அக்கள்வன் யோசித்து நிச்சயித்திருக்கவேண்டும்? கணிதசாஸ்திரத்தில் கரைகண்ட யாதொரு மகாபண்டிதனுடைய புத்திகூர்மையைவிட அக்கள்வனுக்கு எவ்வளவு அதிக புத்திகூர்மை யிருந்திருக்கவேண்டும்? இந்தப்படியே பொய்பேசுகின்றவன் தான் ஒருவரிடத்து ஒருகாலத்துக் கூறிய பொய்மொழியை ஸ்தாபிப்பதற்காக எவ்வளவு யுக்தி யோசனையோடு வேறு எத்தனை விதமான பொய்மொழிகளைப் பேசவேண்டியதாயிருக்கிறது? பிறர்மனைநயத்தல் முதலிய ஒழுக்க ஹீனத்திற் சிறந்த மகாபாபங்களைச்செய்ய முயலும் ஒவ்வொருவனும் பிறர் கண்ணுக்குத் தான்செய்யும் தீத்தொழில்கள் புலப்படாவகைக்குப் புத்திகூர்மையுடன் எவ்வளவு முன்யோசனை செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது? ஆகவே புத்திகூர்மையென்னும் ஒன்று மாத்திரம் ஒருவனுக்கிருக்குமாயின் இத்தியாதி ஒழுக்க ஹீனமான காரியங்களை அவன் ஒரு நொடியிற்செய்யவல்லவனாவன். அக்கொடியோர்களிடத்துள்ள புத்திகூர்மையானது துஷ்டசெய்கையை எவ்வளவும் தடுக்கவில்லையே? ஆனபடியால் புத்தி ஒன்றே நல்லொழுக்கத்திற்கு எவ்வளவும் காரணமாகமாட்டாது. தேவரீரும் எனது நண்பராகிய சவுந்தரரும் மேற்கோளாக எடுத்துக்காட்டிய வசனங்கள் யாவற்றிலும் கல்வி அறிவைவிளக்கும் என்னும் பொருள் தொனிக்கின்றது. அறிவு என்னும் பதம் புத்தக்கூர்மை என்றே பொருள்படும். கல்வி ஒருவனது அறிவாகியபுத்தியைக் கூர்மைப் படுத்துவதினாலேயே ஒழுக்கத்தையும் கூடவேகொடுக்கவல்லது என்பது சத்தியமாயின், அடியில் யானெடுத்துக் காட்டும் சில வசனங்களுக்கு எனது நண்பர் யாது சமாதானம் கூறுவாரோ அறிகிலன்?

"கற்ககசடறக் கற்பவை கற்றபி
னிற்கவதற்குத்தக."

கற்கத்தக்கனவற்றை ஐயந்திரிபுமுதலிய இல்லாமல் ஒருவன் கற்கக்கடவன். அங்ஙனம் கற்றபின் தான் கற்ற விஷயத்திற்கேற்றபடி நிற்

கக்கட்வன், என்று கல்வியையும் ஒழுக்கத்தையும் வெவ்வேறு பிரித்து என் சொல்லவேண்டும்?

"கற்றதனலாய பயனென்கொல் வாலறிவ
னற்றடொழாஅரெனின்"

கடவுளின் திருவடியைத் தொழாவிட்டால் ஒருவன் கல்விகற்றதனலாய பயன்யாது என்று ஏன் கூறவேண்டும்? கல்விகற்பதாகிய ஒன்றே தெய்வபக்தியை விளக்கத்தக்கதாயின் இவ்வண்ணம் கூறவேண்டிய அவசியமிராதே?

"கல்வியென்னும் பல்கடல் பிழைத்தும்"
"தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி."

என்று ஞானிகள் கூறியதுயாது காரணத்தினலே? சற்குணங்கள் யாவற்றிலும் நடுநாயகமாயுள்ள தெய்வநம்பிக்கையை யுண்டாக்காமல் இடையூறு செய்யும் பலவற்றுள்ளும் கல்வியையும் ஒன்றாக ஞானிகள் கூறியதைநோக்கின் அது தெய்வநம்பிக்கை உண்டாவதற்கு விரோதமானதென்றேதெரியவருகிறது; இதனல் கல்வி எவ்வளவும் ஒழுக்கத்தை உண்டாக்காதென்பதல்ல என்னுடைய கோட்பாடு. ஆனல் அது ஒழுக்கத்தை உண்டாக்காமலும் இருக்கக்கூடும், அதற்கும்ஒழுக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்பதே என் கொள்கை. கல்வியில்லாதவர்களே பெரும்பாலும் யாதொரு இராச்சியத்தில் குற்றவாளிகளாயிருக்கின்றார்களென்று சவுந்தரர் கூறிய விஷயம் மெய்யே. கல்வியில் தமக்கு நிகரற்றிருந்த சில சிறந்த வித்வான்களிடத்தும் அழுக்காறு - அகங்காரம் - கொலை-பிறர்மனைநயத்தல்-முதலிய கூடாவொழுக்கங்கள் பூரணமாய் நிறைந்திருந்தன என்று சரித்திரங்களால் நமக்குத் தெரியவருகிறது. கல்விகற்றுப் புத்திகூர்மை அடையப்பெற்றவர்களுட்சிலர் தீக்காரியங்களைச்செய்யும்போது அது பிறர்கண்ணுக்குத்தெரியாமல் தப்பித்துக்கொள்ளுவதற்கான உபாயங்களை அனுசரிப்பதினலேயே, கல்வியறிவில்லாத மந்தமதிகள் இராஜதெண்டனைக்குள்ளாகத்தக்க குற்றவாளிகளாவது போலாகாமல் தப்பித்துக்கொண்டு திரிகின்றார்களென்றே யான் கூறுவேன். உலகத்தில் ஜனங்கள் நாகரீகம் அடைந்து வரவர சகோதரவாஞ்சை முதலிய சற்குணங்களில் மேம்பட்டு ஒழுக்கமுடையவர்களாகின்றார்கள் என்று எனது மித்திரர் கூறியதும் எனக்குச் சம்மதமில்லை. உலகத்தில் மனிதர்கள் என்று தோன்றினர்களோ அன்றே அவர்களிடத்துச் சகல சற்குணங்களும் துர்க்குணங்களும் தோன்றியிருந்தன என்னும் சித்தாந்தத்தை அவர் மறந்தார்போலும். எக்காலத்திலே ஒழுக்க முதலியவற்றில் ஜனங்கள் சிறந்திருக்கிறார்களென்று நமது மித்திரர் வியந்து கூறுகிறரோ அக்காலத்திலேயே சகல துர்க்குணங்களும் இருக்கின்றன. முற்காலத்தைவிட இக்காலத்தில் துர்க்குணங்கள் சிலவிஷயங்களில் அதிகரித்திருக்கின்றன என்பதே என் கொள்கை.

"என்னே கிரேதத்திரேணுகையே கூற்றுவனுந்
தன்னேர்திரேதத்திற்சானகியே-பின்யுகத்திற்
கூடுந்துரோபதையே கூற்றாங்கலியுகத்தில்
வீடுதோறுங் கூற்றுவனுமே."

என்பதுபோன்ற பிரமாணங்களால் முற்காலத்தைவிட நாகரீகம்பெற்றதென்று வியக்துரைக்கப்பட்ட இக்காலத்தில் தீமைகள் அதிகமென்றே தோன்றுகின்றன. சற்குணங்களும் துர்க்குணங்களும் எக்காலத்தும் மனிதரிடத்திருப்பது இயற்கை. நாகரீக அபிவிருத்தியினால் நல்லொழுக்கமுண்டாகின்றதென்றும் நாகரீகம் இன்மையினால் துர்க்குணங்களிருக்கின்றனவென்றும் பரிஷ்காரமாய் வரையறை ஏற்படுத்திச் சொல்வது எவ்வளவும் பொருந்தாது. கல்வியறிவும் ஒழுக்கமும் ஒருவனிடத்தில் ஏககாலத்துப் பொருந்தியிருப்பதினாலேயே ஒன்று மற்றொன்றுக்குக் காரணமாகாது. இரண்டு ஊசிகளைத் தனித்தனியேவைத்து அவற்றிற்கெதிரில் ஓர்ஸ்காந்தக்கல்லைப் பிடித்தால் அந்தஸ்காந்தம் அவ்விரண்டு ஊசிகளையும் ஏககாலத்தில் இழுக்க, அவை அக்கல்லினிடத்துவந்து தங்குகின்றன. அவ்விரண்டு ஊசிகளும் ஏககாலத்தில் அந்தப்படி அக்கல்லினிடத்துவந்து தங்குவதற்கு ஸ்காந்தத்தின் ஆக்கிரஹண சக்தியே காரணம். ஒரு ஊசி வருவது மற்றொரு ஊசி வருவதற்கு எவ்வளவும் காரணமாகாது. அதுபோல் கல்வியறிவு-நல்லொழுக்கம் ஆகிய இவ்விரண்டையும் ஏககாலத்தில் பெறும்பொருட்டு வெவ்வேறான முயற்சியை ஒருவன் செய்தாலன்றி அவனிடத்தில் ஏககாலத்திலே இவ்விரண்டும் அமையா. கல்வியைக்கற்று புத்தியை விசாலப்படுத்திக்கொள்ள முயலும் ஒவ்வொருவனும் நல்லொழுக்கமுடையவனாயிருப்பதற்கும் அதேமாதிரி முயற்சி செய்யவேண்டும்.

இன்னது செய்வது நல்லொழுக்கமாகும், இன்னது செய்வது தீயொழுக்கமாகும் என்பதைப் பகுத்தறிவு காட்டினாலன்றி ஒருவன் ஒழுக்கமுடையவனாயிருத்தல் முடியாதென்றும், ஆகையால் அப்பகுத்தறிவை விசாலப்படுததும் கல்வியே ஒழுக்கத்துக்குக் காரணமென்றும் நமது மித்திரர்கூறியது எவ்வளவும் சரியல்ல. ஏனெனில், ஒருவனுக்குரித்தான ஓர் இருட்டறையில் பல அருமையான காட்சிப்பொருள்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதற்குள் நல்லவனொருவனும் கெட்டவனொருவனும் பிரவேசித்து உள்ளேயிருக்கும் பதார்த்தங்களை அறியும்பொருட்டு ஒருவிளக்கையேற்றினார்களென்று பாவித்துக்கொள்வோம். அவ்விளக்கு வெளிச்சத்தினால் அங்கிருந்த கரட்சிப்பொருள்களின் அருமை அவ்விருவருக்கும் நன்றாய் விளங்கியது. அவற்றைக் கண்டமாத்திரத்தில் கெட்டவன் அவற்றுள் சிலவற்றைத் திருட ஆரம்பிக்கின்றான். நல்லவன் அவற்றைக்கண்டு மனமகிழ்ச்சி கொள்ளுகிறான். கெட்டவன் திருடுவதற்கும் நல்லவன் மனமகிழ்ச்சி கொள்ளுவதற்கும் விளக்கல்லவே காரணம். அது உள்ளபதார்த்தங்களைக் காட்டிற்றேயன்றி வேறென்னசெய்தது? கெட்டவன் அவற்றுள்

சிலவற்றைத்திருட ஆரம்பித்ததற்கு அவனுடைய துர்க்குணமே காரணமும், நல்லவன் அவற்றைக்கண்டு மகிழ்ந்ததற்கு அவனுடைய சற்குணமே காரணமுமாயிருந்தன. அதுபோல், கல்வியறிவானது காரியங்களின் யுக்தா யுக்தங்களைக்காட்ட வல்லதேயன்றி யுக்தமானதைச் செய்யவும் அயுக்தமானதைத் தவிர்க்கவும் பிரேரேபிக்கமாட்டாது.

உலகத்தில் அந்தந்த தேசத்தின் சரித்திரங்களை நாம் வாசித்துப் பார்க்குமிடத்து எந்தெந்தத் தேசம் நாகரீகத்தில் மிகவும் உயர்ந்து எக்காலங்களில் சிறந்திருந்தனவோ அவைகள் அக்காலங்களிலே பெருந் தீமைகளுக்கெல்லாம் உறைவிடமாயிருந்தன என்று தெரியவருகிறது. கிரீஸ்-உரோம் என்னும் பட்டணங்களின் பூர்வீக சரித்திரங்களே இது விஷயத்தைப்பற்றிச் சாட்சி பகரத்தக்கன. விவேகம் அல்லது புத்தி கூர்மையென்பது மூளையைப்பற்றிய விஷயம். ஒழுக்கம் என்பது இருதயத்தைப்பற்றிய விஷயம். இவ்விரண்டும் தனித்தனியே அபிவிருத்தியாக முயற்சிசெய்தாலன்றி அறிவும் ஒழுக்கமும் ஒருவனிடத்தில் ஏககாலத்திலேஅமையமாட்டா. கல்வி அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும் என்றுசொன்னது அதற்கு உபசாரமேயன்றி வேறல்ல. அப்படிக்கன்றி அது எதார்த்தமாயினும் அக்கல்வி ஞான நூற்கல்வி என்று பொருள்படும், ஏனெனில்,

“அலகுசால்கற்பினறிவு நூல்கல்லா
துலகநூலோதுவதெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டுதடுமாற்றம்
போஒந் துணையறிவாரில்.”

என்று பிரமாணமிருக்கின்றது. ஞான நூற்கல்வியறிவு நல்லொழுக்கத்தையும் தழுவவேண்டியது அத்தியாவசியம்.

பத்மநாபன் என்னும் அரசன்செய்த உபந்நியாசம்.

புலவர்களே, கல்விக்கடலின் கரைகண்டுணர்ந்த நீங்கள் என்சமஸ்தானத்தில் இருக்கப்பெற்ற என்னுடைய பாக்கியமே பாக்கியம்! என் வேண்டுகோளின்படி நீங்கள் இருதிறத்தாராகப்பிரிந்து இந்த முக்கிமான விஷயத்தைப்பற்றி அபிப்பிராயம் தெரிவித்ததற்காகப் பேரானந்தமடைகின்றேன். இப்போதெடுத்துக் காட்டப்பட்ட இருவித நியாயங்களையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்துக் கல்வியறிவு அதிகரிக்க அதிகரிக்க ஒழுக்கமும் அபிவிருத்தியாக வேண்டியதாயினும், அந்தப்படி அது ஆவதில்லையென்றே தீர்மானிப்பது யுக்தமாகத்தோன்றுகின்றது. ஒருமனிதனுக்குக் கல்வியறிவு தீபத்தைப்போன்றது. அதைக்கொண்டுஅவன் தன் கிருக கிருத்தியங்களுக்குவேண்டிய சமையல்-வெளிச்சம் முதலானவற்றிற்கு உபயோகப்படுத்திக்கொண்டு சுகமடைந்தாலும் அடையலாம். அதைக்கொண்டே தன் கிருகத்தைக்கொளுத்திப் பாழாக்கித் துக்கமடைந்தாலும் அடையலாம். அதுபோல் கல்வியறிவு விளக்கம்பெற்ற ஒருவன் அதைக்கொண்டு நல்லொழுக்கமுடையவனு

னாலும் ஆகலாம் அல்லது அதைக்கொண்டே தீயொழுக்கமுடையவனானுமாகலாம். நீங்கள் யாவரும் வீட்டுக்குப்போய்வாருங்கள்.

இவ்வாறுசொல்லி அரசன் தன்னுடைய கொலுமண்டபத்தை விட்டு அரண்மனையைச்சேர்ந்தான். அன்றுமுதல் தன் அரசாட்சிக்குட்பட்ட கல்விச் சாலைகளிலெங்கும் புத்தியை விசாலப்படுத்துவதற்கேற்ற கணிதம்-தர்க்கம்முதலிய சாஸ்திராப்பியாசம் வித்தியார்த்திகளுக்குச் செய்துவந்ததைப்போலவே நல்லொழுக்கத்திலும் அவர்களை அடிநாள் தொடங்கிப்பயிலும்படி செய்வித்தனன். அன்றியும் தெய்வபக்தியை விளைக்கத்தக்க நூல்களையும் அவர்களுக்குப் பாலியமுதல் போதிக்கும்படி கட்டளையிட்டான். தன் பட்டத்தை மூத்தகுமாரனுக்கு அளித்து மற்ற மூவருக்கும் வேண்டியமட்டில் திரவியம்கொடுத்து அவரவர் இஷ்டப்படி நடந்துகொள்ளும்படி அனுப்பிவிட்டான். கல்வியறிவுக்கும் நல்லொழுக்கத்துக்கும் வெவ்வேறு புண்ணியங்கள் செய்திருக்கவேண்டும் போலும் என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டு ஒருவாறாக மனந்தேறினான்.

ஓர் கரடியின் கதை.

(தொடர்ச்சி.)

உ-ம். அத்தியாயம்.

மந்தானகன் இரைதேடுவதற்காக வெளியேபோயிருக்கையில் உத்தமஜீவி தனியே இருந்துகொண்டு தன் குட்டிகளைப் பலதடவை நன்றாய்த் தேகமுழுமையும் கொஞ்சம் நேரம்வரையில் நக்கிக்கொண்டிருந்தது. அன்றுகாலையில் ஒருதடவை அது அவற்றை நன்றாய் நக்கினபடியாலும், கரடிக்குட்டிகளின் மேனி எவ்வளவு வழவழவென்றும் சுசியாயும் இருக்கவேண்டுமோ அவ்வளவு நன்றாய் அவையிருந்தபடியாலும் அவற்றை மறுபடியும் அந்தப்படி நக்கவேண்டிய அவசியம் எவ்வளவுமில்லை; ஆயினும் தம்முடையமேனியும் உரோமமும் வெகு நன்றாயிருக்கின்றனவென்று மெச்சி அக்குட்டிகளைச் சந்துஷ்டியடையும்படி செய்யவேண்டுமென்கிற எண்ணமும், அவை பெரிதாகும்போது நன்றாய் வளர்க்கப்பட்ட சுசிகரமான கரடிகளென்று கண்டோர் அவற்றை மெச்சவேண்டும் என்கிற எண்ணமும் அத்தாய்க்கரடிக்கு இருந்தபடியால் அது அக்குட்டிகளை மேற்கண்டபடி பலவிசையும் நக்கி அவற்றின் மேனியையும் உரோமங்களையும்அழகுபெறச்செய்வதில் அவ்வளவுஜாக்கிரதையாயிருந்தது. மேற்கண்டபடி பலதடவை அவற்றை நக்கியபிறகு கடைசியாக அவற்றைப்பார்த்து மனத்திருப்தியடைந்து எழுந்திருந்து குகையைச்சுற்றிலும் உலாவி வாயிற்படியண்டை உட்கார்ந்துகொண்டது. அப்படியிருக்கையில், இரண்டுகுட்டிகளுக்குள்ளே அதிக பெரிதும் பலசாலியுமான விக்கிரமவீரன் என்னும் குட்டிக்கரடி தன் தாயைக்காணாமல் பயங்கரமான ஓர் பெருங்கூச்சல் போட்டபோது தாய் தூரத்திலிருந்துகொண்டு தன் இருக்கையைப்பற்றி அரவஞ்செய்து அதற்குக் குறிகாட்டவே அக்குட்டிக்கரடி அதனிடத்துவருவதற்குக் கூடுமானவரையில் பிரயத்தனப்பட்டபோது அடிக்கடி இரண்டடிக் கொருவிசைகீழே வீழ்ந்து தள்ளாடிக்கொண்டு தத்தளித்து இளைப்படைந்தது. அதற்கு இளைய சமு



கன் என்னுங் குட்டிக்காடியும் அதேமாதிரி தத்தளித்துத் தள்ளாடியதைப்பார்த்தால் மஹாவிநோதமாயிருந்திருக்கும். இந்தப்படி இவையிரண்டும் பிரயாசப்பட்டுத் தங்கள் தாயினிடம்வந்து சேர்ந்து அயர்ந்து தூங்கிவிட்டன. அவற்றைப்பார்த்து, இவைகள் மலைகளின் மீது ஏறுவதற்கு இன்னும் வெகுநாளைய பழக்கம் வேண்டியதாயிருக்கிறதென்று உத்தமஜீவி நினைத்து ஓர்பக்கமாய் நன்றாய் நீட்டிப்படுத்துக்கொண்டு அவற்றைப் பார்த்திருக்கையில் சந்துஷ்டியினாலே தான் பசியாயிருப்பதைக்கூட மறந்துபோய்விட்டது. அப்போது செடிகள் கலகலவென்று சப்தித்ததனாலும் கதவுவழியாய்ச் சூரியகிரணம் பிரகாசமாய்த் தன்மீது பட்டபடியாலும் உத்தமஜீவிக்குத் தன் நாயகன் ஞாபகம்வந்து, உடனே எழுந்திருந்து, மந்தானகன் வருகிறதா என்று பார்க்க வெளியேவந்தது. அப்படிவருகையில் சூரியோதயத்தினால் இமாசலமுழுதும் எவ்வளவு மனோகரமாயிருந்தது! மலையடிவாரத்தில்செடிகள் பச்சென்றிருந்ததும் அவற்றில், நறுமணங்கமழும் புஷ்பங்கள் புஷ்பித்திருந்ததும், பனிக்கட்டிகள் அங்கங்கு இன்னும் நன்றாய்த் தண்ணீராயுருகாமல் சூரியரஸ்மியினால் பளபளவென்று இரஜிதம்போல் உத்தமஜீவியின் கண்தெறித்துப் போகும்படி பிரகாசித்ததும் அதிவிநோதமாயிருந்தன.

நெடுநேரமாய்த் தன் நாயகன்வரவை உத்தமஜீவி எதிர்பார்த்திருந்தும் அது வரவில்லை; பசியினாலும் ஆகாரத்துக்காக நெடுநேரம் வளையில் எதிர்பார்த்திருந்ததனால் உண்டான அயர்வினாலும் மனவருத்தமடைந்து, தானும் தன் நாயகனும் சாப்பிடுவதற்காகவும் உல்லாசமாய்ப் பேசுவதற்காகவும் விருந்தாளியை உபசரிப்பதற்காகவும் உபயோகமாகும் சமமான ஓர் கற்பாறையின் மேலும் கீழுமாக உத்தமஜீவி மெதுவாய் உலாவிக்கொண்டிருந்தது. இப்படியிருக்கையில்மலையடிவாரத்திலே நெடுந்தூரமாகக் காட்டிலிருந்து மெதுவாய்வருகிற தன் நாயகனாகிய மந்தானகனை உத்தமஜீவி கண்டது. மந்தானகன் கையில் ஏதோபளுவான ஒன்றைத்தூக்கிக்கொண்டு எங்கே அது கைநழுவிப்போகிறதோ என்கிற பயத்தோடுவருவதாக உத்தமஜீவி கண்ணுக்குத்தோற்றியது. மந்தானகன் அதிஜாக்கிரதையாய் ஒவ்வொரு பாறையாகத்தாண்டிக் குகையிருக்குமிடத்துக்குச் செங்குத்தாய்ப் போகும்பாதையில் ஏறிவருவதை உத்தமஜீவி பார்த்துக்கொண்டிருந்து, அது தன் சமீபத்தில்வந்த உடனே ஒருகையில் அற்புதமான தேன்கூடு ஒன்றையும் மற்றொருகையில் ஆகாரத்துக்கேற்ற இளசான பச்சைநிறமுள்ள கிழங்குகளையும் கொண்டுவந்ததாக அதற்குத்தெரியவந்தது. இந்த பண்டங்களைக் கண்டமாத்திரத்தில் தான் இது பரியந்தங்கொண்டிருந்த மனக்கவலையையும் அடைந்திருந்த அதிருப்தியையும் உத்தமஜீவி முழுவதும் மறந்தது. இதுபரியந்தம் மழை பெய்துகொண்டிருந்து இப்போதுதான் சூரியகிரணம் கண்ணுக்குப் புலப்பட்டிருக்க இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு அற்புதமான ஆகாரம் எப்படி அகப்பட்டதென்று கேட்பதற்குக்கூட அவகாசமில்லாமல் உத்தமஜீவி அதிசீக்கிரத்தில் அக்கிழங்குமுதலிய ஆகாரங்களைத் தின்னத்தொடங்கியது.

அது அந்தப்படி புசித்துக்கொண்டிருப்பதை மந்தானகன் சந்துஷ்டியோடு பார்த்துக்கொண்டிருந்தது. மந்தானகன் காட்டிலேயே தன் பசியைத் தணித்துக்கொண்டபடியினால் உத்தமஜீவி கிழங்குகளைத்தின்று தேன்கூடுக்குத் திரும்புகிற பரியந்தம் காத்துக்கொண்டிருந்தது. உத்தஜீவி தேன்கூடைப் புசிக்கலாம் வா என்று கூப்பிட்டு, ஆரணியத்தில் நடந்த வரலாற்றைத் தனக்குச்சொல்லும்படி கேட்கிறபரியந்தம், மந்தானகன் தூங்கிக்கொண்டிருக்கும் குட்டிகளை நன்றாய் உற்றுப்பார்க்க அதற்கு வேண்டியவளையில் அவகாசமிருந்தது. பிறகு மந்தானகன் தேன்கூண்டின் ஓர் நல்ல பாகத்தைப்பிட்டு அதைக் கையில் வை

த்து உரிந்துகொண்டே ஓர் குடும்பத்துக்குத் தலைவனாயிருப்பவனுக்கு எவ்வளவு கெம்பீரமிருக்குமோ அவ்வளவு கெம்பீரத்தோடு தன் விருத்தாந்தத்தை அடியில்வருமாறு சொல்லத்தொடங்கியது.

"பெண்ணே, இது இளவேனில் ஆரம்பகாலமானபடியால் தேனீக்கள் புஷ்பங்களிலிருந்து தேனைச்சேகரிக்க இப்போதுதான் ஆரம்பித்தன. அப்படியிருந்தும் இவ்வளவு பூரணமாய்த் தேன்நிறைந்த இக்கூடு எனக்கு அதிர்ஷ்டவசத்தினால் அகப்பட்டதென்றே சொல்லவேண்டியது, ஓர் பெரிய ஆலவிருட்சத்தின் கிளையின்மீது நான் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது அடியில் அதிவிந்தையான ஓர் ரீங்காரசப்தம் எனக்குக்கேட்டது, அதன் காரணத்தைக் கண்டறியலாமென்று கீழே இறங்கினேன். அவ்விருட்சத்திலுள்ள ஓர் தொளைக்குள் அனேகவிதமான தேனீக்கள்போவதும் வருவதுமாயிருந்தன. அவற்றின் கால்கள் முழுமையும் மகரந்தப்பொடிகள் நிறைந்திருப்பதை நாம் பல தடவைகளிலும் பார்த்திருக்கிறோம், உனக்குத் தெரியுமல்லவா? நான்கண்ட இடத்திலிருந்த தேனீக்கள் மீதோ கொஞ்சங்கூட மகரந்தப்பொடியில்லை. அவைகள் அதிவேகமாய் உள்ளுக்குப்போவதும் அயர்ந்துமெல்ல அசக்கிக்கொண்டு வெளியே வருவதுமாயிருந்தன. முதலில் அதன் காரணம் எனக்குப் புலப்படவில்லை. அந்த விருட்சத்தில் அதற்குமுன்னமே வேறே சில தேனீக்களால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த தேனை மேற்படி ஈக்கள் எப்படியோ கண்டுபிடித்தன என்றும் அந்தத் தேனை அவ்விடத்தில் சேர்த்துவைத்த தேனீக்கள் மழைகாலத்தில் குளிரினால் இறந்துபோய்விட்டன என்றும் பிறகு எனக்குத் தெரியவந்தது. அப்படிப்பட்ட நல்ல ஆகாரத்தை அந்தத் தேனீக்களைத் தனியே நான் தின்னவொட்டுவேனா? உனக்குத்தெரியாதா? உடனே அவ்விருட்சத்தின் பட்டையை நான்முறித்து, இப்போது நீ புசித்துக்கொண்டிருக்கிற இவ்வற்புதமான கூட்டைக்கண்டுபிடித்தேன்.

"உடாஅதுமுண்ணாதுந்தம்முடம்புசெற்றுங்
கெடாஅதநல்லறமுஞ்செய்யார்-கொடாஅது
வைத்தீட்டினாரிழப்பர் வான்றோய்மலைநாட
உய்த்தீட்டுந்தேனீக்கரி."

ஆகாயம்வரையில் அளாவியிருக்கும் மலைநாட்டரசனே, தாம் தேடியபொருளைக்கொண்டு உடுக்காமலும் உண்ணாமலும் ஒரு காலத்துங்கெடாத நல்ல தருமத்தைத் தம் தேகத்தை வருத்தியுஞ்செய்யாமலும் இருக்கின்ற உலோபிகள் அப்பொருளின் பயனையடையாமல் வீணேமரிப்பார், பின்பு அதைவேறொருவர் அனுபவிப்பார், இந்த விஷயத்துக்கு வருந்தித் தேனைச்சேகரித்து அதை அனுபவிக்காமல் மாண்டுபோகும் தேனீக்களே சாட்சி என்று மேலோர்கூறிய பிரமாணம் பொய்யாகுமோ? அம்மரத்தில் தேடிவைத்த தேனை அனுபவியாமல் ஈக்கள் மாண்டுபோக நாமல்லவோ அதை இப்போது அனுபவிக்கின்றோம்?

அந்தத்தேனை உனக்காக வீட்டுக்குக் கொண்டுவருகையில் நான்பட்ட கஷ்டத்தை என்னென்றுசொல்லுவேன்! எவ்வளவுநேரம்பிடித்தது! அதை இவ்விடத்திற்குக் கொண்டுவருவதற்கு எவ்வளவுநேரமும் கஷ்டமும் பிடித்திருக்குமோ அது மாத்திரம் உனக்குத் தெரிந்திருக்குமானால் நான் இவ்வளவுநேரம் பொறுத்துவந்ததைப்பற்றி உனக்குவியப்பிராது."

மந்தானகன் இந்தப்படி தன் பிரதாபத்தைச் சொல்லிமுடித்தது. பிறகு அதுவும் உத்தமஜீவியும் தம்முடைய குட்டிகளுக்கு இதைக்காட்டி அவை என்னசெய்யுமோ பார்க்கலாமென்று எண்ணிக் கொஞ்சம் வைத்துவைத்தன. குட்டிகள் விழித்துக்கொண்டவுடனே மந்தானகன் அவ்விரண்டையும் தனித்தனி

யே வெளிச்சம்படும்படி வெளியே விசையாய் இழுத்துவிட்டது. அதனால் குட்டிகள் தட்டித்தள்ளாடி இலேசாய்வந்து வெளியேவிழுந்தன. அக்குட்டிகள் தங்கள் தாயின் விரல்களை மெல்ல நக்கிக்கொண்டு இருப்பதை மந்தானகன்பார்த்து அதிகசந்தோஷமடைந்து, அவைகள் ஆகாரத்தை முதல் முதல் சிறு குழந்தைகளைப்போலத் தின்பதைக் கவனித்துக்கொண்டிருந்தது.

இந்தப்படி அவைகள் சாப்பிட்டபிற்பாடு மந்தானகன் குட்டிகளைமெல்ல நகரச்செய்து தன்கையினால் அவற்றை அடிக்கடி தள்ளிக்கொண்டேபோயிற்று. உத்தமஜீவியோ தான் உண்டசுவையான ஆகாரத்தினால் அதிக திருப்தியடைந்து ஓர் மூலையிலுட்கார்ந்து தலையை அசைத்துக்கொண்டேயிருந்தது.

பகற்காலத்தில் உஷ்ணம் அதிகரித்திருக்கும்போது கரடிகள் எப்போதும் வெளியில் போவதில்லை என்பதும், சற்றேறக்குறைய நாள்முழுமையும் தங்கள் குகையிலேயே இருந்துகொண்டு சாயரட்சை ஜில்லென்றிருக்கும்போது வெளியே ஆகாரத்துக்குத் திரிகிறதென்றும் நமக்குத்தெரிந்திருக்கிறது. ஆனபடியால், உத்தமஜீவி வெய்யிலில் உறங்கிக்கொண்டிருப்பதைக்கண்ட மந்தானகன் குட்டிகளைமுன்னே உருட்டிக் குகையில் தள்ளிப் பிறகு மெள்ளத்தன்கையினால் உத்தமஜீவியைத்தட்டி எழுப்பி, "என்கண்ணே, நேரமாகிறது படுத்துக்கொள்ளலாம் வா." என்றுசொல்லிக் கூப்பிட்டது. உத்தமஜீவி கண்திறந்து, தன் குட்டிகள் உள்ளேபோயிருக்கின்றனவா என்று முன்னேபார்த்து நிச்சயித்துக்கொண்டு பிறகு மந்தானகனுடன் உள்ளேசென்றது.

இவ்வண்ணமாக அந்தக்கரடிகள் நிம்மதியாகவும், யாருக்கும் ஒரு தீங்குசெய்யாமலும், சற்றேறக்குறைய நாள்முழுவதும் தூங்கிக்கொண்டும், குகைக்குச் சமீபமாய் அகப்படத்தக்க ஆகாரத்தைத் தின்றுகொண்டும் நாள் கழித்துவந்தன; ஏனெனில் மந்தானகனுக்கும் உத்தமஜீவிக்கும் வயதாய்க்கொண்டு வருகிறபடியால், நெடுந்தூரமாய் முன்னே பலவிடங்களிற்போய் பற்பல பண்டங்கள் முதலியவற்றை அடித்துக்கொண்டுவந்ததுபோல் இப்போது போகவேண்டும் என்கிற நாட்டம் அவைகளுக்கு இல்லை.

பெருங்கரடிகளிரண்டும் மலையில் செங்குத்தான பாகங்களில் ஏறவும் இறங்கவும் தம் குட்டிகளுக்குக் கற்பித்துக் கொடுப்பதிலேயே வெகுசாய்த் தம் காலத்தைப் போக்கிக்கொண்டுவந்தன; கொஞ்சநேரம் உத்தமஜீவிஎன்னும் தாய்க்கரடி குட்டிகளைத் தனியே விட்டுவிட்டு மந்தானகன் என்னும் தன் நாயகனுடன் வனத்தில் உலாவப்போகும். நாளாவர்த்தியில் விக்கிரமவீரன்-சுமுகன் என்னும் குட்டிக்கரடிகள் தாம் தெரிந்துகொள்ளவேண்டிய அனேக விஷயங்களைப்பற்றி அறிந்துகொள்ளவும் உத்தமஜீவி என்னும் தாயை அனேகவிஷயங்களைப்பற்றிக் கேள்விகேட்கவும் தொடங்கின. குட்டிகள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சமாதானம் சொல்லிக்கொண்டிருப்பதற்கே உத்தமஜீவிக்குச்சரியாயிருந்தது. யாதொருகரடிதெரிந்துகொள்ளவேண்டியதெளிவானஒவ்வொருவிஷயத்தையும் தெரிந்துகொள்ளவேண்டுமென்று அக்குட்டிகளுக்கு அவாவிருந்தது; ஆகவே உத்தமஜீவி தான் புத்தியறிந்தது முதல்பார்த்த அல்லது அறிந்த அல்லது கேள்வியுற்ற சகல கரடிகளைப்பற்றியும் விரிவாய்த் தன் குட்டிகளுக்கு ஞாபகப்படுத்திக் கதைகள் சொல்லவேண்டியதாயிருந்தது. மலைமீதிருந்த குகைக்கு வருவதற்காக கரடு முரடுகளாயிருந்த படிகளின் மீது மந்தானகன் மெதுவாயேறிவருகையில், தன் நாயகியாகிய உத்தமஜீவியுடன் விக்கிரமவீரனாகிய தன் மூத்தகுமாரன் காத்திரத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டிருப்பதையும் அதற்குச் சமீபத்தில் காலண்டை சுமுகன் படுத்துறங்குவதையும் பார்க்க அதற்குப் பேரானந்தமாயிருந்தது. அவ்விரண்டுகுட்டிகளுக்கும் கழு

த்தில் மயிர்வெளுத்து வெள்ளிப்பூண் போட்டதுபோலிருந்து பிரகாசமாய்த் தோன்றினபடியினால், மந்தானகன் நெடுந்தூரத்தில் வரும்போதேகண்டு களிக்கக்கூடியதாயிருந்தது. இந்த காட்சியைக்கண்டு அதிக சந்துஷ்டியடைந்து தாய்க்கரடியாகிய உத்தமஜீவியும் இறுமாந்திருந்த தென்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை.

(இன்னும்வரும்.)

பொருளில்பேராசையுள்ளவனுக்கு யாராசையுமில்லை.

ஒரு ஊரில் ஒருபயிரிடும் குடியானவன் இருந்தான். அவன் யாருக்கும் ஒருகாசளவும் உபகாரஞ்செய்யாத பரமலோபி. பசித்துவந்த பரதேசிகளுக்கும் ஒருபிடியன்னம் உதவான். அவன் தன் பெண்டுபிள்ளைகள் நட்டோர்மீதுவைத்த அன்பைப்பார்க்கிலும் பொருளின்மீது கோடிபங்கு அதிக ஆசைவைத்தவன். அவன் குருதெய்வம்முதலிய யாவும்பொருளேயென்று நம்பி அப்பொருளைச் சம்பாதிப்பதிலும், விருத்திசெய்வதிலும் பாதுகாப்பதிலும் அல்லும் பகலும் விடாமுயற்சிசெய்து வந்தனன். அந்தக்குடியானவன் ஊருக்கு நடுவில் வாசம்செய்தால், யாசகர்களுக்குப் பிச்சையிடவேண்டுமென்றும், ஊரார்செய்யும் தானதருமங்களுக்குத்தானும் கட்டுப்படவேண்டியதென்றும், அயலார்க்குக் கடன் முதலியனகொடுத்து நஷ்டப்பட வேண்டியிருக்குமென்றும் எண்ணி, தானிருக்கும் ஊருக்கு இரண்டுநாழிகைத் தூரத்திலுள்ள தன் கொல்லை நிலத்திலோர் குடிசைபோட்டுக்கொண்டு அதில் வாழ்ந்து வந்தனன்.

> "நடுவூருள்வேதிகைச் சுற்றுக்கோட்புக்க
> படுபனையன்னர் பலர்நச்சவாழ்வார்
> குடிகொழுத்தக்கண்ணுங் கொடுத்துண்ணமாக்க
> ளிடுகொட்டுளேற்றுப்பனை."

பலரும் தம்மால் பலனடைந்து வருவதனாலே தம்மை மிகவும் விரும்பும்படி வாழ்கின்றவர்கள்-ஊர்மத்தியில் நாற்புறமும் திண்ணைசூழ்ந்திருக்க மேலே நன்றாய்க்காய்த்த (பூலோககற்பகத்தருவாகிய) பனைமரத்துக்கு நிகராவார்; செல்வமுதலியவற்றில் வளப்பம் மிகுந்திருந்த காலத்தும் பிறருக்குக்கொடுத்துண்ணா உலுத்தர்கள் - சுடுகாட்டில் ஒருவருக்கும் பயனின்றிநிற்கும் ஆண்பனையை ஒப்பாவாரென்று மேலோர்கூறிய இலக்கணத்துக்கு அந்தக் குடியானவனே இலக்கியமாய் நின்றான்-

இவ்வாறிருக்கையில் அந்தக் குடியானவனுக்குக் குலகுருவாகிய சித்தயோகியென்பவர் தம்முடைய சிஷ்யர்கள் வாசஞ்செய்யும் ஊர்கள்தோறும் யாத்திரைசெய்து அவரவர்கள் சமர்ப்பித்த குருதக்ஷிணைகளைப் பெற்றுக்கொண்டு, அந்தக் குடியானவன் தனியே வாசஞ்செய்யும் வீட்டை எப்படியோ விசாரித்துக்கொண்டு வந்துசேர்ந்தனர். அந்

தக் குருவைக்கண்ட மாத்திரத்தில் குடியானவன் பெருந் திகில்கொண்டு இவனென்ன நமக்கோர் பெருஞ்சனியனாய் வந்துவிட்டானே. "காசிக்குப்போயும் கருமந்தொலையவில்லையே." என்னும் பழமொழிபோல், ஊர்நடுவில் வாசஞ்செய்தால் இப்படிப்பட்ட வீண்தொல்லைகள் பலவாக நேரிடுமென்று யாருமற்ற காட்டில்வந்து நாம் தனியே குடியிருந்தும் இந்தச் சங்கடங்கள் இன்னும் நம்மைவிட்டு ஒழியவில்லையே, இதென்ன அவதியாயிருக்கின்றது, நல்லது, இவனை நாம் தந்திரத்தால் ஏமாற்றிவிடுவோம், என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டிருக்கையிலே, குருவானவர் அக்குடியானவனுடைய மனைவியிடத்தில் க்ஷேமசமாசாரங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அவன் ஏதோ காரியார்த்தமாய்ப் போகிறவன்போல் வீட்டுக்குள்ளேசென்று, மறுபடியும் வெளியேவரும்போது கையைமூடிய வண்ணமாய் வைத்துக்கொண்டு வந்தான். அவ்வாறுவந்த குடியானவன் குருவைநோக்கி, சுவாமீ, காலாதீதமாகின்றது, எழுந்தருளலாம் என்று வினய விஸ்வாசத்துடன்கூற, குருவானவர் சிஷ்யன் தமக்குத் தக்ஷிணைகொடுக்க ஏதோ கையில் மூடிவைத்துக்கொண்டு அழைக்கின்றானென்று பெருங்களிப்புடன்எழுந்து, குடியானவனுடைய மனைவிமக்களை ஆசிர்வதித்து அவனுடனே சென்றனர். குடியானவன் தன்குருவைக் கொஞ்சதூரம்வரையில் அழைத்துக்கொண்டுபோய் வழிவிட்டுக் குருவைநோக்கி, சுவாமீ, இது என்னமாதம்? என்றுவினவினான். அதற்குக் குரு சிஷனைப்பார்த்து அப்பா, இது ஐப்பசி மாதம் என்றுகூறினர். உடனே குடியானவன், ஐப்பசி-கார்த்திகை-மார்கழி-தை-மாசி என்று மூடியிருந்த கைவிரல்களை நீட்டிக்கணக்கிட்டு சுவாமீ, இதற்கு ஐந்தாமாதமாகிய மாசியில் தேவரீர் என்வீட்டுக்கு எழுந்தருளினால், அப்போது அடியேனுக்குக் காலம் சிறிது அனுகூலமாயிருக்குமாதலால் தங்களுக்குச் செலுத்தவேண்டிய தக்ஷிணைகளைப் பூமேல்வைத்துச் சமர்ப்பிக்கிறேன், இப்போது தேவரீருக்குப் படிச்செலவுமுதலானவை கொடுக்கவும் அடியேனால் சாத்தியப்படவில்லை, எளியேன் அவ்வளவு கேவல நிலையிலிருக்கின்றேன், சுவாமிகள் திருவுளத்தில் கருணைகூர்ந்து இதுவிஷயத்தில் கோபங்கொள்ளாது மன்னித்தருளல் வேண்டுமென்று தேனொழுகப் பேசினான். சிஷ்யன் கையில் ஏதோ தக்ஷிணைவைத்து மூடிக்கொண்டு தம்மை அழைக்கின்றானென்று அடங்காப் பெருங்களிப்புடன் வந்தகுரு-சிடன்கையைப் பாக்கத்திறந்து இவ்வாறுகூறியதைக் கேட்டமாத்திரத்தில் திடுக்கிட்டு ஒன்றுந்தோன்றாமல் மனக்கிலேசத்துடன் சிடனிடத்தில் விடைபெற்றுக்கொண்டுபோயினர். பிறகு குடியானவன் தன் வீட்டுக்குவந்து மனைவியைநோக்கி, பெண்ணே, இன்று நமக்குவந்த இந்தப்பெரிய ஆபத்தினின்றும் ஆபத்சகாயராகிய கடவுள் நம்மைத் தப்புவித்துக் காப்பாற்றியருளினாரென்று தான் குருவை ஏமாற்றிய வகையைச்சொல்லிச் சந்தோஷித்து வாழ்ந்திருந்தனன். சில நாள்கழிந்தபின்னர் மாசிமாதத்தில் ஒருநாளிரவில் நன்றாய் மழைபெய்தது. அன்று மறுநாள்காலையில் குடியானவன் தன்வயலை உழுவதற்குக் கலப்பை முதலானவை

யெடுத்துக்கொண்டு விட்டினின்றும் புறப்பட்டான். அவன் வீட்டுவாயிற்படியைத்தாண்டுகையில், வாயிற்படியின் மேல்சட்டம் தலையில் இடித்தது. அதுகண்ட அவன்மனைவி தன் நாயகனைநோக்கி நீர்புறப்படும்போதே வாயிற்படி தலையில் முட்டுண்டபடியால் இது உமக்கு ஏதோ ஒருபெரிய சங்கடத்தையுண்டாக்கும் கெட்டசகுனமாகும், நீர் சற்று உட்கார்ந்துபோதல் நலமாம் என்றுகூறினாள். குடியானவன் அம்மொழிகேட்டு, எனக்கென்ன ஆபத்து விளையப்போகிறது, இப்போது மழைக்காலமாயிருத்தலால் ஒருவேளை இடியிடித்து என்தலையில்விழும்படி நேரிடலாம் என்றுகூற, மனையாள் இப்போது வானத்தில் மேகபடலமில்லாமல் பரிசுத்தமாயிருப்பதால் இடியுண்டாகமாட்டாது என்று மொழிந்தனள். நாயகன் ஆனால் இடிவிழுதலினும்பெரிய ஆபத்தொன்று இன்று நமக்குண்டாயினும் உண்டாகலாம், இது மாசிமாத மாதலால் நமது குரு தக்ஷிணைக்குவருவார்போலிருக்கிறது, இப்பேராபத்தைத்தவிர வேறென்ன நமக்கு விளையப்போகிறது? நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், என்சொற்படி நீ நடப்பாயானால் இந்த விபத்திலிருந்து தப்பிப்பிழைக்கலாம்; நமது குரு வீட்டுக்குள் வருமுன்னமே நீ யுன் தாலியைக் கழற்றிப்பானையில் வைத்துவிட்டு, அவர் உள்ளேவந்தவுடனே உன்பிள்ளைகளையெல்லாம் அழைத்துக்கொண்டுபோய் அவர்பாதத்தில்போட்டு நானிறந்துபோய்விட்டதாகச்சொல்லி அழுதால் பேசாமல்போய்விடுவார், பிறகு நாம்துக்கமின்றிச் சுகமாய்வாழலாம் என்று கூறிவயலுக்குப்போயினான். குடியானவன் கழனிக்குப்போன சிறிது நேரத்துக்குள் குரு அவன் யூகித்தபடியே வந்தார். அவரைத் தூரத்திலேகண்டபொழுதே குடியானவன் மனைவி விரைவாக வீட்டுக்குட்சென்று தன் கழுத்திலிருந்த மாங்கலியத்தைக் கழற்றிப் பத்திரப்படுத்திவிட்டு, குருஉள்ளே வந்தவுடனே தன் பிள்ளைகளையெல்லாம் கொண்டுபோய் அவர் பாதத்தில் போட்டு, சுவாமீ, என்னுடைய நாயகன் இறந்து இன்றைக்கு ஐந்து நாளாகிறது, என்னையும் இக்குழந்தைகளையும் ஆதாரமின்றித் தெருவில் விட்டுப்போய்விட்டார், நான் என்செய்வேன்? இப்பிள்ளைகளைவைத்துக்கொண்டு எவ்வாறு பிழைக்கப்போகின்றேன்? என்று ஓ என அலறி நீலியழை அழுதனள். அத்திருட்டமையைக் குரு மெய்யென்றே நம்பி, நாம் இங்கு நாலைந்து நாள் தங்கியிருந்து கருமாதிகாரியங்களை முடித்துப்போவோமானால் சிறிதுபொருளோடும் போகலாம் என்று தனக்குள் எண்ணி, குடியானவன் மனைவியைநோக்கி, அம்மா, நீ உன்புருஷனுடைய மரணத்துக்காகத்துக்கிப்பதால் இனிஆவதென்ன? விதியைவிலக்க யாவரால் முடியும்? மாண்டாரை நினைந்து புரண்டு புரண்டு அழுதாலும் அவர்கள் வருவார்களா? நாம்மாத்திரம் என்னசாஸ்வதமாயிருக்கப்போகின்றோமா? நமக்கும் அவ்வழிதானே, ஆகையால் துக்கிப்பதில் யாது பயன்? நாமிருக்குமளவும் தீமையை ஒழித்து நல்வழியிலொழுகி நம்மால் கூடியமாத்திரம் மனமொழிமெய்களால் பிறர்க்குதவிசெய்து வாழ்வதேமுறையாகும், இனி நீ துயரொழிந்து, உன்நாயகனுக்குச்செய்யவேண்டிய கருமாதிகா

ரியங்களுக்குப் பிரயத்தனஞ்செய்க, நானும் உடனிருந்து எல்லாக்காரியங்களையும் முடித்துவிட்டுப்போகிறேன் என்றுகூறி அவ்விடத்திலேயேயிருந்தனர். அவ்வாறிருக்கையில் வயலுக்குப்போனகுடியானவன் வீட்டுக்குத் திரும்பிவந்து, உள்ளே குரு பேசிக்கொண்டிருப்பதைக்கேட்டு இந்தச்சனியன்இன்னும் ஒழியவில்லையே, இவன் போனபிறகுதான் நாம் வீட்டுக்குள் போகவேண்டும், இதற்கிடையில் நடக்குங் காரியங்களையெல்லாம் பார்த்திருப்போமென்று தன் வீட்டுக்கொல்லையிலிருந்த ஒரு பெரிய புளியமரத்திலேறி அங்கிருந்தவண்ணமே வீட்டுக்குள் நடப்பனவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தனன். அன்று சாயுங்காலத்தில் குருவானவர் மலோபாதைகழிக்கும் நிமித்தம் கொல்லையிலுள்ள அதே புளியமரத்தின் கீழ் உட்கார்ந்துகொண்டு, தன் சிஷன் இறந்தநாளை ஆராய்ந்து, அது தனிஷ்டாபஞ்சமி கூடிய கெட்டநாளாயிருத்தல் கண்டு, ஐயோ! நமதுசிஷன்மனைவி குழந்தைகளுடையவளாதலால், இவ்வீடு அவள் குடியிருத்தற்கு ஆகாதே, அவன் இறந்தநாள் ஆகாதநாளாயிருக்கின்றதே என்று மனதில் சிந்தித்துக்கொண்டே நாழிகையறியும்பொருட்டுப் புளியமரத்தின் மேலே பார்த்தார். அதில் தன் சிஷன் இருப்பதுகண்டு, குரு நடுநடுங்கி, தனிஷ்டாபஞ்சமியில் மாண்ட நமது சிடன் கிரகமாகி வீட்டைச் சுற்றிக்கொண்டிருக்கின்றானென்று துணிவுகொண்டு எழுந்து அப்புறம்போகவும் காலெழாமல் திகில்கொண்டிருந்தனர். அந்த நிலைமையைக்கண்ட குடியானவன் குருவுக்குப் பின்னும் பயங்காட்டும்படி மரத்தின்மேலிருந்து கீழேபொத்தென்று குதித்தனன். அது கண்ட குரு துணுக்குற்றெழுந்து, நாமின்றுசெத்தேபோனோம் என்று தீர்மானித்துக்கொண்டு, பிராணன் யாவர்க்கும் இனிமையாகையால், நம்மாலானவரைக்கும் பார்ப்போம் என்று மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடத்தொடங்கினர். அவ்வாறு பயந்தோடும் குருவைச் சிஷன் நெடுந்தூரம் துரத்திக்கொண்டுபோய், குருவைநோக்கி, உனக்கின்று நல்லகாலம், பிழைத்தோடிப்போ, இனி இவ்வழிநோக்கி என் மனைவி மக்களிடம் வந்தால் உன்னை முறித்து வாயில் போட்டுக்கொண்டு உன் பெண்டுபிள்ளைகளைத் தெருவில் அலையவிடுவேன் என்று கூறி வீட்டுக்குத்திரும்பிவந்து நடந்த அதிசயத்தை மனைவியிடஞ் சொல்லி, குரு தன்வீட்டில் வைத்துவிட்டுப்போன மடிசஞ்சி, பூஜாபாத்திரங்கள் முதலியவற்றை அபகரித்து, ஒருவர்க்கொன்றீயாமலும், தன்னை ஒருவரும் வந்து ஒன்றுகேளாமலும் பரமலோபசிகாமணியாய் வாழ்ந்திருந்தனன். குரு நாம் இன்று பிழைத்ததே பெரும் புண்ணியமென்று தன் வீடுபோய்ச்சேர்ந்தனர்.

ஆகையால் பொருளில் பேராசைவைத்து அதனையே பெருந்தெய்வமாகப் பாவித்து வழிபட்டுவரும் பரம உலுத்தனிடத்தில் எவ்வித சற்குணமும் உதிப்பது அரிதரிது. "பொருளில் பேராசையுள்ளவனுக்கு யாராசையுமில்லை" என்னும் பழமொழிக்கு இக்குடியானவனே ஒரு நல்ல உதாரணமாயினன்.

பாஷையின் உற்பத்தி.

மனிதர்கள் தத்தம் கருத்தை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொள்வதற்குப் பாஷையே முக்கிய கருவியாயிருக்கின்றது. உலகத்திலுள்ள ஒவ்வொரு பிராணியும் தன் இனத்தைச்சேர்ந்த மற்றொரு பிராணிக்குத் தன் கருத்தை வெளியிடவேண்டுமானால் அந்தந்த இனத்திற்கு ஏற்ற ஒருவகையான பாஷையை சர்வஜீவதயாபரராகிய கடவுள் அமைத்தே வைத்திருக்கின்றார். ஆயினும் மனிதருடைய பாஷைக்கும் ஏனைய பிராணிகளுடைய பாஷைக்கும் உள்ள வித்தியாசம் இன்னதென்பதை அறியாதவர் ஒருவரும் இலர். மனிதர்கள் தங்களுடைய கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கவேண்டுமானால் தங்களுடைய கண்டம்-நா-தந்தம்-உதடு என்னும் உபகரணங்களைக்கொண்டு வசனிக்கவேண்டியது அவசியம். அவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு சப்தபேதத்தையுடையது. இப்படி பல வார்த்தைகள்சேர்ந்த ஓர் தொகுப்பைத்தான் பாஷை யென்று சொல்வது. ஏனைய பிராணிகள் பெரும்பாலும் தத்தம் புறத்துறுப்புகளினாலும் சிறுபான்மை மேற்கண்ட நாமுதலிய உபகரணங்களினாலும் தம்முடைய கருத்தைத் தம் இனத்தைச் சேர்ந்தவைகளுக்கு ஒருவாறாகத் தெரிவித்துக்கொண்டுவருகின்றனவேனும், அவையெல்லாம் மனிதர்கள் பேசும் பற்பல சப்தபேதங்களமைந்த பாஷைக்கு நிகராகா. அப்படிப்பட்ட பாஷை ஆதியிலுண்டான விதத்தைச் சுருக்கமாய்க்கூறுவோம்.

ஆதியில் மனிதர்கள் தங்களுடைய கருத்தை எப்படி வெளியிடத்தொடங்கினார்களோ அதை நாம் நன்றாய் அறிந்துகொள்ளவேண்டுமானால் இப்போது நம் வீட்டுச் சிறு குழந்தைகள் என்னவிதமாய் முதலில் பேசத்தொடங்குகின்றனவோ அதைநாம் நிதானித்துக் கண்டறியவேண்டும். ஆதியில் மனிதர்கள் இப்போது குழந்தைகள் செய்வதுபோலத் தங்களுடைய இன்பதுன்பங்களைக் கூச்சல்போட்டும் அங்கங்களினால் சைகைசெய்தும் தெரிவித்துவந்தார்கள். நாளைக்கும் நிர்மானுஷ்யமான யாதொரு தீவில் ஒருவனுடைய பாஷை மற்றொருவனுக்குத் தெரியாத இரண்டு வெவ்வேறுஜாதியார் ஏதோ ஒரு காரணத்தினால் வந்து ஒன்றாகச் சேர்ந்தார்களென்று வைத்துக்கொள்வோம். அவர்களுள் ஒருவன் மற்றொருவனுக்கு பயம்-ஆச்சரியம்-துக்கம்-சந்தோஷம்முதலிய மனோவிகற்பங்களைத் தெரிவிக்கவேண்டுமானால் பெரும்பாலும் அதற்கு ஏற்ற கரசரணாதி அவயவங்களினால் சைகைகள் காட்டுவதோடுங்கூட-ஆ! ஏ! ஓ! முதலிய சப்தபேதங்களமைந்த இடைநிலைகளையே உபயோகிக்க வேண்டியதல்லவா? இதுபோலவேதான் ஆதியில் ஜனங்கள் ஒருவரோடொருவர் சம்பாஷிக்க நேர்ந்தபோது முதலிலுண்டானவைகள் மேற்கண்ட சப்தபேதங்களைக் காட்டும் இடைநிலைகளென்னும் சொற்களேயாம்.

பிறகு தம்முடைய கண்ணுக்குப்புலப்பட்ட சகல பதார்த்தங்களுக்கும் பெயரிடவேண்டிய அவசியம் நேரிட்டது. அவைகள் இப்போது இலக்கணத்தில் பெயர்ச்சொற்கள் என்று வழங்கிவருகின்றன. அப்பெயர்களெல்லாம் ஆதியில் பெரும்பாலும் இடுகுறிகளாகவே இருந்தனவென்றே சொல்லவேண்டியது. பிற்பாடு ஜனங்கள் தாம் கண்ட பதார்த்தங்களைக் கையாளும்போதும் தாங்கள் ஒருவரோடொருவர் கலக்கும்போதும் நிகழவேண்டியதாயிருந்த பற்பல தொழில்களுக்கும் பெயரிடவேண்டியதாயிற்று. அத்தொழில்களுக்கிட்ட பெயர்கள் இப்போது இலக்கணத்தில் வினைச்சொற்கள் எனப்படும். மேற்கண்ட பற்பல பொருள்கள்-தொழில்கள் ஆகிய இவற்றின் குணுகுணங்களின் பேதங்களைத் தெரிவிக்கவேண்டிய அவசியகம் நேரிட்டபோது பண்புச்சொற்களும் உரிச்சொற்களும் உண்டாயின. சொற்களை ஒன்றோடொன்று சேர்த்துத் தொடர்ச்சியாக ஒரு கருத்தை வெளியிட அவசியம் நேர்ந்தபோது உருபுகள்முதலிய இடைச்சொற்கள் உண்டாயின.

மேற்கண்டபடி அந்தந்த பொருள்களுக்கும் செய்கைகளுக்கும் ஜனங்கள் பெயரிடத் தலைப்பட்டபோது பெரும்பாலும் குழூஉக்குறிகளாகவே அனேக பெயர்களையிட்டு வழங்கினர்கள். ஆயினும் எல்லாப் பெயர்களையும் ஏகதேசத்தில் இடுகுறிகளென்றே சொல்வதும் சரியல்ல. அனேக பெயர்கள் காரணப்பெயர்களாகவும் இருக்கின்றன. அப்படிப்பட்ட காரணப்பெயர்கள் வெகுசாய் ஆதியில் சப்தத்துக்கேற்றபடி இடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. கா, கா, என்று கூச்சல்போடுகிற காரணத்தினுல் அந்த பட்சிக்குக் காக்கையென்னும் பெயரிட்டது போல் டிங் டங், சள சள, பட பட, நெறு நெறு, குமு குமு, என்னும் சொற்களெல்லாம் சப்தத்தை நாடி ஆதியிலிடப்பட்டதாகவே தோன்றுகின்றன. இப்படிப்பட்ட சொற்களுக்கு இலக்கணக்காரர் இரட்டைக்கிளவி என்று கூறுவர். சில சொற்கள் வியப்பினுலும் விரைவினுலும் நிச்சயத்தினுலும் பாம்பு பாம்பு என்று அடுக்கி வருவதுமுண்டு. அவைகளுக்கு இலக்கணக்காரர் அடுக்குத்தொடர் என்னும் பெயரிட்டிருக்கிறர்கள். மேலே குமுகுமு, சள சள, என்பதுபோன்ற இரட்டைக்கிளவிக்கும் அடுக்குத்தொடருக்கும் உள்ள வித்தியாசம் யாதென்றல்-இரட்டைக்கிளவியில் அடுத்தடுத்துவரும் இரண்டுமூன்று சொற்களில் ஒன்றைமாத்திரம் உச்சரித்தால் உத்தேசித்த அர்த்தம் உண்டாகமாட்டாது. குமு அல்லது சள என்று மாத்திரம்சொன்னல் அது யாதொருபொருளையும் பயவாது. அது இரண்டு மூன்றுதடவை அடுக்கியபோதுதான் உத்தேசிக்கப்பட்ட கருத்து வெளியாகும். அடுக்குத்தொடரோ அப்படியல்ல. அதிலுள்ள ஒவ்வொருசொல்லும் தனித்தனியே நின்று அதததற்குரிய பொருளைப்பயக்கும்.

ஆதியில் ஆ! ஓ! ஏ! முதலாகிய இடைச்சொற்களைக்கொண்டும் அவயவங்களைக்கொண்டும் தத்தம் கருத்தை வெளியிட்டுவந்த ஜனங்க

ளின் சந்ததியார் இப்போது மனதில் உதிக்கும் சகல தோற்றங்களையும் ஒருநொடியில் பிறர்க்குத் தெரிவித்துத்தாம் அடையும் இன்பதுன்பங்களைப் பிறர் கேட்டமாத்திரத்தில் அடையும்படி பாஷா ஞானம் பெற்றிருப்பது என்ன ஆச்சரியம்!

அதிகாலையில் எழுந்திருப்பதனால் உண்டாகும் பயன்.

காலையில் அருணோதயத்துக்குமுன் நித்திரைவிட்டெழுந்திருப்பது தேக சுகாதாரத்துக்கேற்றதென்று சாஸ்திரம் முறையிடுகின்றது. ஒரு நாளெல்லாம் மனம் பலவாறாக உழன்றபின் இரவில் அயர்ந்து நித்திரைசெய்து மனதுக்கு வேண்டியவரையில் ஆசோதை தந்தபிறகு அதிகாலையில் எழுந்திருப்போமாகில் மனம் மிகவும் தெளிவடைந்திருக்கும். இராத்திரியில் தூங்குவதற்குமுன் இரண்டு மூன்றுமணிநேரம் கஷ்டப்பட்டாலும் வாராதபாடம் அதிகாலையில் அரைமணி நேரத்திலெல்லாம் மனதில் நன்றாய்ப் படிந்து விடுவதை ஒவ்வொரு வித்தியார்த்தியும் அனுபவ சித்தமாகக் காணலாம். ஆகையால் மனம் அக்காலத்தில் தெளிவடைந்திருக்கிறதென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. வாசிப்பில் நாட்டமுள்ள வித்தியார்த்திகளான பாலியர்களுக்கு அதிகாலையிலெழுந்திருப்பது எப்படி மகா உசிதமோ அதுபோலவே, நடுவயதுள்ளவர்களும் வயோதிகர்களும் உஷத்காலத்தில் எழுந்திருக்கும் வழக்கத்தை அனுஷ்டிப்பார்களானால் அது அவர்களுக்கும் பெருத்த நன்மையைப் பயக்கும். அது அவர்களுடைய தேகாரோக்கியத்தை அபிவிருத்தி செய்யத்தக்கதேயன்றி ஆயுளையும் விருத்தியாக்கத் தக்கது. காலையில் ஐந்துமணிக்கு மேற்பட்டு உறங்குகிற ஒவ்வொருவனையும் பிணியாளனென்றே சொல்லவேண்டுமென்று ஓர் பிரபல வைத்தியபண்டிதர் கூறுகிறார். தேவாராதனை - ஈஸ்வர உபாசனை முதலியவற்றிற்கு மனம் மிகவும் தெளிவடைந்து நிர்மலமாயிருக்கத்தக்க உஷத்காலமே மஹாஉசிதம். இந்த விஷயத்தை அநேக யுகங்களுக்கு முன்னரே நமது பூர்விக இந்துக்கள் வெகு நன்றாய் அறிந்தனர். திருப்பள்ளியெழுச்சி - திருவெம்பாவை ஆகிய இவற்றை ஈஸ்வர சந்நிதானத்தில் ஓதுவதென்னும் உஷத்கால தேவாராதனை ஏற்பாடே இதற்குச் சாட்சி பகரத்தக்கது. பிரதமத்தில் அதிகாலையில் படுக்கையைவிட்டெழுந்திருப்பதைவிட கஷ்டமான செய்கை வேறொன்றுமிராது. அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பவனை நாம் எழுப்பும்போது அவனுக்குப் பெருங்கோபம் உண்டாவது இயற்கையே. ஆனால் இரண்டொரு நாளைக்கு அந்தப்படி உஷத்காலத்தில் எழுந்திருக்கப் பழகிக் கொண்டால் பிறகு அதனாலுண்டாகும் சுகத்தை ஒவ்வொருவனும் அடைந்து அனுபவிக்கத்தக்கதாயிருக்குமேயன்றி அது இப்படிப்பட்டதென்று பிறருக்குச் சொல்லவொண்ணாததாய் முடியும். முக்கியமாய் நமது இந்தியாதேசத்தைப்போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் அதிகாலையில்

எழுந்திருந்து நாற்புறமும் விருட்ச வர்க்கங்களின் பசுமையையும், புள்ளினங்களின் இனிய ஓசையையும், நதி - ஏரி - சமுத்திரம் முதலிய இடங்களில் பிரதிபலிக்கும் அருணோதயப்பொலிவையும் காண்பதனால் உண்டாகும் சுகமே சுகம்! அந்தணர்கள் ஆதியில் இந்த இந்தியா தேசத்திலே வேதாகம இதிகாசங்களை ஓதி மனனம் செய்யவேண்டியிருந்த படியால் அதற்காக அவர்களுக்கு ஞாபகசக்தி அதிகரிக்க வேண்டிய அவசிய மிருந்தது. அதை அடையும் பொருட்டு அவர்கள் செய்த காரியம் யாது? உஷத்காலத்தில் எழுந்திருந்து கங்கா ஸ்நானம் செய்யவேண்டியதாயிற்று. இதுவே அவர்களுடைய ஞாபகசக்தியை அபிவிருத்தி யாக்கத்தக்கதோர் பெருங்கருவி. அவ்வளவு காலையில் ஸ்நானம் செய்தபோது குளிர் மிகுந்தபடியால் உடனே சுகந்தத்தைத் தரத்தக்க சிறு காஷ்டங்களாகிய சமித்தைக்கொண்டு ஓமஞ்செய்து ஈஸ்வரத்தியானம்பண்ணி வந்ததோடுங்கூடக் குளிர் காய்ந்தும் வந்தார்கள். இத்தியாதி ஒழுக்கங்களினால்தான் ஏனைய வருணத்தாரைவிட அந்தணர்களுக்கு ஆதியில் புத்திகூர்மையும் ஞாபகசக்தியும் விவேகவிளக்கமும் மிகுந்திருந்தன. பித்த சம்பந்தமான தேகமுடையவர்களுக்கு அதிகாலையில் எழுந்திருக்கும்போது பிரதமத்திலே பித்தநீர் அதிகரித்து ஓர்வித மயக்கமும் தலைநோயும் ஒருவேளை உண்டாகக் கூடும். அதனால் அவர்கள் அதைரியப்படாமல் அடுத்தடுத்து ஏழெட்டு நாள்வரையில் உஷத்காலத்தில் எழுந்துகொண்டே வருவார்களாகில் வெகு சீக்கிரத்தில் அவர்களுடைய பித்தரோகம் அவர்களிடத்தில் சொல்லாமலே தலைகாட்டாதோடுமென்று சில பிரபல வைத்தியசாஸ்திரிகள் வற்புறுத்திக் கூறுகிறார்கள். ஆனால் ஏழெட்டு வயதுக்குட்பட்ட அதிபாலியர்கள் நெடுநேரம் வரையில் தூங்கவேண்டிய அவசியமிருக்கிறபடியாலும், அவர்கள் தாமே நித்திரை தெளிந்து எழுந்திருக்கிறவரையில் அவர்களை இடையில் எழுப்புவது யுக்தமன்றானபடியாலும் அவர்களை மாலையில் வெகு சீக்கிரமாய் உறங்கச்செய்து அதிகாலையில் தாமே எழுந்திருக்கும்படி பண்ணுவது அதிக உசிதமென்று ஒரு சிறந்த பண்டிதர் கூறுகிறார். உலக சரித்திரத்தை வாசித்துப் பார்க்குமிடத்து அதிக மனோதைரியமும் தேகாரோக்கியமும் விவேகவிளக்கமும் பெற்றுச் சுத்தவீரர்களாகவும் சிறந்த வித்வசிரோன்மணிகளாகவும் மிக்க மதியூகிகளாகவும் இருந்தவர்களுக்குள் அனேகர் தூக்கத்துக் கிடங்கொடாமல் அதிகாலையில் எழுந்திருக்கும் வழக்கத்தை விடாது அனுஷ்டித்து வந்தார்களென்று அவரவர்களுடைய வாழ்நாட் சரித்திரங்களால் தெளிவாய் விளங்குகிறது. ஆகையால் தேகாரோக்கியம் பெற்றுத் தமக்கும் பிறர்க்கும் பெரும்பயனை விளைக்கத்தக்க நற்காரியங்களில் பிரவர்த்திக்க மனமுள்ள சத்புருடர்கள் யாவரும் "வைகறைத்துயிலெழு." என்று அம்மையார் கூறிய அமுதவாக்கைக் கடைப்பிடித்து ஒழுகுவாராக.

சமாச்சாரம்.

ஓர் நூதனகடிகாரம்.—எடிஸன் என்னும் ஐரோப்பிய கனவானொருவர் விந்தையான கடிகாரம் ஒன்று செய்திருக்கிருர். அது அந்தந்த மணி நேரங்களில் மணியடிப்பதற்குப் பதிலாக ஒன்று, இரண்டு, மூன்று, என்று ஒருவன் பேசுவதுபோலவே ஆங்கிலேய பாஷையில் உரத்த சத்தத்துடன் கூவுகிறது. ஐரோப்பியர் சாப்பிடும் நேரங்களிலே அந்தயந்திரம் "ஐயா காலைப் போஜனவேளையாயிற்று," "மத்தியான போஜனவேளையாயிற்று", என்று அதிவினயத்துடன் கேட்போருடைய உள்ளங்கனியும்படி இனித்த சாரீரவளத்துடனே அது கூப்பிடுகின்றது. இதைச்செய்த அதிபுத்திகோசரமுடைய மேற்கண்டசீமான் சுரபேதலட்சணத்தில் அதிக பாண்டித்தியம் பெற்ற சாஸ்திரியாராம். இவர் பெண் பொம்மையொன்றைச் செய்திருக்கிருர். அதுவும் கடிகாரத்தைப்போலவே கால அளவைக்காட்டத்தக்கது. அது காலை-மத்தியானம்-இராக்காலங்களில் "போஜனவேளையாயிற்று," "படுக்கை நேரமாயிற்று" என்று கண்ணிமை-புருவம்-உதடுகள்-கழுத்து-கைகள்முதலிய அவயவங்கள் அசைய மிக ஒய்யாரமாய் அதிவினயத்துடன் அழைக்கின்றது. அத்தருணத்தில் நூதனமாய் அவ்விடத்திலுள்ள விருந்தாளிகள் யாரோ ஒரு பெண்பிள்ளை நம்மை அழைக்கின்ருளென்றே பிரமித்துவிடுகிருர்கள். மஹா அற்புதம்!

மின்சாரரெயில்வே.—இதுவரையில் நீராவியாலிழுக்கப்பட்ட தூமசகடமென்னும் ரெயில்வண்டிகள் இனி மின்சாரத்தினுலிழுக்கப்படுமோம். லண்டன் நகரத்தில் மின் சாரத்தைக்கொண்டு வண்டித்தொடர்களை இயக்கிப் பார்த்ததில் நீராவியைவிட அது வேகத்தில் நூறுமடங்கு மிக்கதென்று தெரியவந்தது. அவ்வளவு வேகத்துடன் உஷ்ணப் பிரதேசங்களில் வண்டித் தொடர் போவது யுக்தமல்லவென்று சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள்.

ஓர் நூதன தீவு.—புயதிகினி என்னும் ஓர் தீவு கண்டுபிடிக்கப்பட்டது. அதன் நிகளம் 1,300 மைல்; அகலம் 18மைல் முதல் 500 மைல் வரைக்கும் சிறுத்தும் பெருத்தும் இருக்கிறது. அங்கு உயர்ந்த பர்வதங்களும் நதிகளும் உன-நாய்-பன்றி இவைகள் தவிர மற்ற ஜெந்துக்கள் கிடையா. ஜனங்கள் குள்ளமாயும், தடித்த உதடு-சப்பைவாய்-அடர்ந்த தலைமயிர் இவற்றை உடையவர்களாயும் இருக்கிருர்கள். அவர்கள் உயர்ந்த மரங்களின்மீது கட்டியிருக்கும் சிறு குடிசைகளிலே வசித்துக்கொண்டு, ஏறவும் இறங்கவும் ஏணிகளை அமைத்து வைத்திருக்கிருர்கள். இவர்கள் நரமாம்சபட்சணிகளாம். அவர்களுக்குள் ஒருமனிதனைக் கொலைசெய்து மண்டையோட்டைக் காண்பித்தால்தான் அந்த சாமர்த்தியத்துக்காக அவனுக்குப் பெண்கொடுப்பதுவழக்கம். இவர்களுக்கும் விலங்குகளுக்கும் அந்தோ! என்னபேதம்! மனிதனைப்போல் கரசரணுதி அவயவங்களைப் பெற்றிருப்பதினுலேயே சிலமைமனிதர்கள் என்று கூறுவதுபொருந்தாது என்பதையும், இரக்கம்-தெய்வபக்திமுதலிய சற்குணங்கள் அமைந்திருப்பதுதான் மானிட லட்சணமாகுமென்பதையும் இதை வாசிப்போர் ஞாபகத்தில் வைப்பாராக.

புறக்கள் மூலமாய்க் கடிதப்போக்குவரவு.—எவ்வளவு தூரமானுலும் சரி தமக்கு ஒருவிசை காட்டப்பட்ட இடத்திற்கு மற்றோரிடத்திலிருந்து தம்மை அனுப்பினுல் புருக்கள் ஆகாயமார்க்கமாய்ப்பறந்துவெகு சீக்கிரத்தில் வரத்தக்கன. கல்கத்தாவுக்குச் சமீபத்திலிருக்கும் ஸிராம்பூர் என்னும் பட்டணத்திலுள்ள ஆலையாட்டும் இடத்துக்கும் கல்கத்தாவிலுள்ள மெகன்ஜி கம்பெனியாருடைய வீட்டுக்கும் தபால் கொண்டுபோகும்படி இரண்டு புருக்கள் பழக்கப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாவிலும் இதேமாதிரியாய் அந்தரங்கமான விஷயங்களை அதிசீக்கிரத்தில் தெரிவிப்பதற்காகப் புருக்கள் உபயோகமாகிவருகின்றன. யுத்தகாலங்களில் இவை மிகவும் பிரயோசனமானவைபோலும்!

PRINTED AT THE ALBINION PRESS,—MADRAS.